மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 06 திங்கட்கிழமை (19.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152




## கிழக்கு மாகாண முதல்வருக்கு பௌத்த பீடாதிபதிகள் ஆசி

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நேற்று மல்வத்தை பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடாதிபதி திப்பட்டுவாவே சுமங்கல தேரர் ஆகியோரை சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற முதலமைச்சர் பிள்ளையான் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டார். (10ஆம் பக்கம் பார்க்க)

## வெசாக் தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

வெசாக் வாரத்தை முன்னிட்டு மேல் மாகாணத்தில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்க தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு நாட்டின் பல பிரதேசங்களில் இருந்தும் இவ் விசேட பாதுகாப்பு கடமைகளுக்காக ஆயிரத்து 500 பொலிஸ் குழுக்கள் அழைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நகரில் தெரிவு செய்யப்பட்ட கேந்திர இடங்களில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளல், வாகனங்களை சோதனையிடுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்படும்.

வெசாக் வாரத்தில் ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தும் செயற்பாடுகளில் இலகு முறை கையாளப்படுவ (10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் தாக்குதல் 20 படையினர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

மன்னாரில் படையினர் மேற்கொண்ட பெருமெடுப்பிலான நகர்வுக்கு எதிராக நடத்திய தாக்குதலில் 20க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 40க்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர்.

படையினரின் 3 உடல்களும் படைக் கலங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் கருங் (10ஆம் பக்கம் பார்க்க)

# பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அரசாங்கம் பகீரதப் பிரயத்தனம்

## கிழக்கு மாகாண சபையில்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையில் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் பெரும்பான்மையினை நிரூபிப்பதற்கு அரசாங்கம் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளது.

நியமனம் தொடர்பில் எழுந்த முரண்பாடு காரணமாக ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா தலைமையிலான மூன்று உறுப்பினர்கள் தனித்து செயற்படப்போவதாக அறிவித்ததையடுத்து கிழக்கு மாகாண சபையில் அரசாங்கத்தின் பெரும்பான்மை கேள்விக்குறியாக மாறியுள்ளது. (10ஆம் பக்கம் பார்க்க)

## அனைவரும் அமைதியாக வாழக்கூடிய வளமான நாட்டை உருவாக்குவோம்



### வெசாக் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதங்கள், எதிரிகள், கள்வர்கள் போன்றவற்றின் அச்சத்திலிருந்து நீங்கி அனைவரும் அமைதியுடன் வாழக்கூடிய நாட்டை உருவாக்குவோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள வெசாக் தினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை வாழ் அனைத்து பௌத்த மக்களுடனும் வெசாக் பண்டிகையை பக்தியுடனும் பற்றுடனும் கொண்டாடுவதில் நானும் இணைந்து கொள்கின்றேன்.

கௌதம புத்தருக்கு நாம் (10ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் பதவி கைநழுவுவதற்கு அமைச்சர் அதாவுல்லாவே காரணம்

### ஹிஸ்புல்லா குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையில் ஆளும் கட்சியின் பெரும்பான்மை கேள்விக்குறியாக மாறியுள்ளது. முதலமைச்சர் பதவி முஸ்லிம் சமூகத்திடமிருந்து கைநழுவிப் போனமைக்கு அமைச்சர் அதாவுல்லாவின் செயற்பாடுகளே காரணமாகும்.

அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தினை ஏமாற்றி விட்டது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவின் பின்னரான நிலை குறித்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

அமைச்சர் அதாவுல்லா தன்னிச்சையாக செயற்பட்டு தீர்மானம் மேற்கொண்டிருக்காவிட்டால் முதலமைச்சர் பதவி எம்மிடம் இருந்து கைநழுவிப் போயிருக்காது.

முஸ்லிம்கள் ஏமாற்றப்படுவதற்கு முழு முதற் காரணமாக செயற்பட்ட அதாவுல்லாவின் செயற்பாடுகள் (10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஏழு சடலங்கள் ஐ.சி.ஆர்.சியிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

மன்னார்,வவுனியா போர்முனைகளில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் கொல்லப்பட்டவர்களில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட 7 விடுதலைப் புலிகளின் சடலங்கள் பொலிஸாரினால் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆறு பெண்கள் உட்பட விடுதலைப் புலிகளின் இந்த 7 (10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல்-பிரதமர்

(கொழும்பு)

மேற்குலகம் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது எனப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரை முன்கொண்டு செல்லும் நாடுகளே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டும் என இலங்கையை அச்சுறுத்துவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பாகிஸ்தான் தூதரகத்தினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர்கள் ஒசாமா பின்லேடனுக்கு எதிராக போர் புரிந்து கொண்டே உலகின் முக்கிய பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகளுடன் போர் புரிய வேண்டாம் என இலங்கையிடம் கேட்கின்றனர் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். (10ஆம் பக்கம் பார்க்க)

## இனவாத மோதல்களுக்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும்

### ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மூலம் இந்தியாவின் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் சொற்படி கேட்டு நடக்கும் முதலமைச்சரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண வளங்களை கொள்ளையடிக்கும் இந்தியாவின் முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அனைவரையும் அரசாங்கம் ஏமாற்ற முனைந்து இன்று கிழக்கில் இன முரண்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

எனவே கிழக்கில் ஏற்படும் எந்த ஒரு இனவாத மோதல் (10ஆம் பக்கம் பார்க்க)

## டக் வேத் லூயிஸ் முறையில்

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணி திரில் வெற்றி

# கங்குலி அணி அரையிறுதியை இழக்கிறது

பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் டக் வேத் லூயிஸ் விதியில் சென்னை சுப்பர் கிங்ஸ் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

இவ் வெற்றியின் மூலம் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, தொடரில் தான் ஆடிய 11-வது ஆட்டத்தில் 7-வது வெற்றியைப் பெற்று அரையிறுதி வாய்ப்பை வலுப்படுத்தியது.

ஐ.பி.எல்.தொடரில் நேற்றிரவு கொல்கத்தாவில் நடைபெற்ற லீக் சுற்றின் 41-வது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, நிற்னியின் வேகத்தில் விக்கெட்டுக்களை இழந்தது. எனினும் ஒரு முனையில் அதிரடியாக ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சல்மான் பட் அரைச் சதம் விளாச, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களையிழந்து 149 ஓட்டங்களை எடுத்து கௌரவமான இலக்கை எட்டியது.

இதில் சல்மான் பட் 54 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்சர் உட்பட) 73 ஓட்டங்களையும் தாஸ் 27 ஓட்டங்களையும் எடுத்தனர். முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான அணித் தலைவர் கங்குலி 2, டேவிட் ஹசி 0. மொகமெட் ஹபீஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தனர்.

பந்து வீச்சில் மக்காயா நிற்னி 4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து ஹட்ரிக் சாதனையுடன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 150 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு பிளமிங், பார்த்திவ் பட்டேல் இணைந்து சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

### மழை குறுக்கீடு

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 8 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 55 ஓட்டங்களை எடுத்தபோது மழை குறுக்கீடு செய்ததால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. மழை தொடர்ந்தும் நீடித்தமையால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, டக்வேத் லூயிஸ் முறையில் மூன்று ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதில் ஆட்டமிழக்காமல் பிளமிங் 20 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங்களையும் பார்த்திவ் பட்டேல் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

### நிற்னி ஹட்ரிக்

சென்னை சுப்பர் கிங்ஸின் ஆரம்பப் பந்து வீச்சாளர் மக்காயா நிற்னி 6-வது ஓவரின் இறுதிப் பந்தில் கங்குலியை நேரடியாக போல்ட் செய்து ஆட்டமிழக்கச் செய்தார். பின்னர் 17-வது ஓவரின் முதலாவது, இரண்டாவது பந்து வீச்சுக்களில் தாஸ்,டேவிட் ஹசியின் விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் ஹட்ரிக் சாதனை படைத்து ஐ.பி.எல். தொடரில் ஹட்ரிக் பெற்ற மூன்றாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இவ் வெற்றியின் மூலம் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் ஆடிய 11-வது ஆட்டத்தில் 7-வது வெற்றியைப் பெற்று புள்ளிகளின் அடிப்படையில் 3-வது அணியாகவுள்ளது.

இதேவேளை இத் தோல்வியுடன் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 11-வது ஆட்டத்தில் 6-வது தோல்வியைச் சந்தித்து புள்ளிகள் அடிப்படையில் 6-வது இடத்தில் உள்ளதுடன் அரையிறுதி வாய்ப்பையும் இழந்துள்ளது. (5)

# சிமித், அனாஸ்கர் விளாசல்; அரையிறுதியில் வோர்ன் அணி

## ராவிட்டின் அரைச் சதம் வீண்



(ஜெய்ப்பூர்)

சிமித், அனாஸ்கரின் அதிரடியான துடுப்பாட்டத்தால் ராஜஸ்தான் றோயஸ் அணி 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தியது.

இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி. அரையிறுதிக்கு முதல் அணியாக நுழைந்தது. ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 39-வது ஆட்டத்தில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராவிட், முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சிமித், அனாஸ்கரின் அதிரடியான அரைச் சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 197 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆட்டமிழக்காமல் சிமித் 49 பந்துகளில் (8 பவுண்டரிகள், 2சிக்சர்கள் உட்பட) 75 ஓட்டங்களையும் அனாஸ்கர் 44 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்சர் உட்பட) 50 ஓட்டங்களையும் மற்றும் வோர்ட்சன் ஆட்டமிழக்காமல் 28 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட்) 46 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 198 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி, ராவிட் அதிரடியாக ஆடி தனி மனிதராகப் போராடிய போதும் மறுமுனையில் ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி 9 விக்கெட்டுக்களையிழந்து 132 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் அணித்தலைவர் ராகுல் ராவிட் ஆட்டமிழக்காமல் 36 பந்துகளில் (6 பவுண்டரிகள், 6 சிக்சர்கள் உட்பட) 75 ஓட்டங்களையும் அடுத்தபடியாக கலிஸ் 20, வைற் 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் தான்வீர், வோர்ன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் முனாப் பட்டேல் 2 விக்கெட்டையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக சிமித் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தானாடிய 10-வது ஆட்டத்தில் 8-வது வெற்றியைப் பெற்று முதலாவது அணியாக அரையிறுதிக்குள் நுழைந்தது. (5)

# அவுஸ்திரேலியாவுடனான முதல் டெஸ்ட்; மேற்கிந்திய அணிக்கு சர்வான் தலைவர்

(ஜமேக்கா)

அவுஸ்திரேலியா அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணிக்கு ராம் நரேஷ்சர்வான் தலைமை வகிக்கவுள்ளார்.

சபினாப் பார்க்கில் எதிர்வரும் வியாழக்கிழமை இப்போட்டி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு தலைமை தாங்கிய கிறிஸ் கெயில் அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளுக்கும் தலைமை தாங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் காயம் காரணமாக முதல் டெஸ்ட் போட்டியில் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ராம் நரேஷ்சர்வான் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் இங்கிலாந்தில் நடைபெற்ற 2டெஸ்ட் போட்டிகளின் போது அணித் தலைவராகப் பணியாற்றிய சர்வான் இம்முறை உலக சம்பியன்களுக்கு எதிராக கடும் சவாலை எதிர்நோக்குகிறார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் செவ்நரி சடர்கோனும் தோள் பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக முதல் போட்டியிலிருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தடை காரணமாக மாலன் சாமுவேல்ஸும் இப் போட்டியில் பங்குபற்ற முடியாதுள்ளது. இந் நிலையில் ரியன் ஹயின்ஸ், ருனாகோ மோட்டன் ஆகியோர் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய அணியுடான போட்டிகளுக்காக அன்ரிக்குவாவில் நடைபெற்ற பயிற்சி முகாம் ஒன்றின் பின்னர் இக் குழாம் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முதல் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விபரம் வருமாறு,

ராம் நரேஷ் சர்வான் (தலைவர்), டுவைன் பிராவோ (உப தலைவர்,பிரன்டன் பேர்ச்மெண்ட், ருனாகோ மோர்ட்டன், ரியன் ஹயின்ஸ், சிவ்நாரின் சந்தர்போல், டெவோன் ஸ்மித், தினேஸ் ராம்டின் (விக்கெட் காப்பாளர்), ஜெரோம் டெய்லர், டென் பொவெல், டெலன் சமி, சுலைமன்பென், அமித்ஜெகர்நாத், பிடெல் எட்வட்ஸ். (5)




# யுவராஜ் அணி திரில் வெற்றி டில்லி டேர் டேவில்ஸ் பரிதாபம்

(டில்லி)

பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி, டக்வேத் லூயிஸ் முறையில் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ் வெற்றியின் மூலம் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை அதிகரித்தது.

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது - 20 தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இரவு டில்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 40-வது ஆட்டத்தில் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி சேவாக், காம்பீரின் அதிரடியான ஆட்டத்தால் சிறப்பான ஆரம்பத்தை பெற்றது.

டில்லி டேர் டேவில்ஸ் அணி 8.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டையிழந்து 94 ஓட்டங்களை எடுத்தபோது மழை குறுக்கிட ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

மீண்டும் மழை நின்றதும் அணிக்குப் 11 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடத்த நடுவர்களால் முடிபு செய்யப்பட்டது. இதனடிப்படையில் தொடர்ந்து ஆடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி 11 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 118 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிறப்பாக ஆடிய சேவாக் ஆட்டமிழக்காமல் 26 பந்துகளில் (5 சிக்சர்கள், 2 பவண்டரிகள் உட்பட) 51 ஓட்டங்களையும் காம்பீர் 28 பந்துகளில் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பவார், ஹோப்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு டக் வேத் லூயிஸ் முறைப்படி 11 ஓவர்களில் 123 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பிய போதும் மகேல ஜெயவர்த்தன , பாமர் ஸ்பாச் ஆகியோரின் அதிரடியில் ஓட்டங்களைக் குவித்தது.

எனினும் மீண்டும் மழை குறுக்கிட்டது. அப்போது கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 8 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 94 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடர்ந்து மழை பெய்தமையால் டக் வேத் லூயிஸ் முறையின்படி கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 6 ஓட்டங்களால் வெற்றி வெற்றது என அறிவிக்கப்பட்டது.

இதில் மகேல ஜெயவர்த்தன 17 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பாமர் ஸ்பாச் 12 பந்துகளில் 25 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் அணித் தலைவர் யுவராஜ் சிங் 8 பந்துகளில் 23 ஓட்டங்களை எடுத்தார். (5)

## இன்று ஒரு தகவல்

# நமது நிழல் !

கொஞ்சம் வசதியான ஆள் ஒருவன் இருந்தான். தாரளகுணம் உடையவன். மற்றவர்களுக்குத் தன்னால் இயன்றளவு உதவி செய்வான். ஆனால் அவனுடைய மனைவியோ மகா கருமி! அதுமட்டுமல்ல... தனது கணவனையும் அடுத்தவருக்கு உதவி செய்ய விடமாட்டாள்.

அந்த ஆள் மற்றவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்று நினைத்தால் கூட அவளை அறியாமல் தான் செய்ய வேண்டும்.

ஒரு சமயம் அந்த அம்மா பிறந்த வீட்டுக்குப் போக வேண்டியிருந்தது. நடந்தே போகலாம் என்று நினைத்து இருவரும் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

அது கோடைகாலம் ஆனபடியால் சரியான வெயில் ஆக இருந்தது. காலில் செருப்பு கூட போடாமல் வெறும் காலோடு தான் போய்க்கொண்டிருந்தார்கள்.

இவர்கள் வரும் வழியில் நிழல் தரும் மரம் கூட இருக்கவில்லை கடுமையான வெப்பம் வாட்டி வதைத்தது. கால்கள் சூடு தாங்க முடியவில்லை.

"கால் சுடுகிறதே... என்ன செய்வது ?" என்றார் அந்த அம்மா. மனைவி தவிக்கிறதைப் பார்த்த கணவன் , "ஏன் இப்படித் தவிக்கிறாய்? உனக்குத்தான் உடம்பு பெரியதே! உன்னுடைய உடம்பின் நிழல் பூமியில் விழுமல்லவா! அந்த நிழலின் மேல் நின்று உடல் சூட்டைத் தணிக்கலாமே" என்று யோசனை சொன்னான்.

அந்த அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன உளறுகிறீர்கள்? என்னுடைய நிழலின் மேல் நான் எப்படி நிற்க முடியும்? " என்றார். இப்பொழுது அந்த கணவன் சொன்னான்.

"கொஞ்சம் சிந்தித்துப்பார் உன்னுடைய நிழலே உனக்கு உதவமுடியவில்லை நீ பெட்டியில் பூட்டிவைத்திருக்கும் பணமா உனக்கு பிற்காலத்தில் உதவப் போகிறது " என்றான்.

அந்த அம்மாவுக்கு புத்தியில் ஒரு தெளிவு உண்டாகியது. மகான்களுக்கெல்லாம் மரநிழலில் தான் ஞானம் உண்டாகும். இந்த அம்மாவுக்கு உச்சி வெயிலில் ஞானம் உண்டாகிறது.

இது கிருபானந்தவாரியார் கூறிய கதை. இதைக் கேட்டதும் எனக்கு இன்னொரு கதை ஞாபகத்திற்கு வந்தது. ஒரு பெரிய செல்வந்தன் இருந்தான். மகா கருமி பணம் சேர்க்கத் தெரியுமே தவிர செலவழிக்கத் தெரியாது. அவனுக்கு மூன்று பிள்ளைகள். பிள்ளைகள் மூவருமே தன்னைப் போலவே கருமியாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான்.

அவனுக்குக் கடைசிக்காலம் நெருங்கி விட்டது. மரணத்தை எதிர்கொள்ளும் தறுவாயில் இருந்தான். மூத்த பிள்ளையைக் கூப்பிட்டான். "நான் இறந்தால் என்னை எப்படி அடக்கம் செய்வாய்? " என்று கேட்டான்.

"உனக்கு சந்தனப் பலகையால் பெட்டி செய்து அதில் உன்னை வைத்து பட்டுத்துணியால் மூடி கௌரவமாக கொண்டு போய் அடக்கம் செய்வேன் " என்றான் அவன். மகனை பளார் என்று அறைந்தான் தகப்பன். "சந்தன மரமும் பட்டுத்துணியும் எவ்வளவு செலவாகும். ஊதாரியாக போய் விடுவாய் போல இருக்கிறதே " என்றான்.

இரண்டாவது பிள்ளையைக் கூப்பிட்டு அதே கேள்வியைக் கேட்டான். அண்ணன் அறை வாங்கியதைப் பார்த்த அவன் ஜாக்கிரத்தையாக பதில் சொன்னான்.

"நான் உனக்கு கள்ளிப் பலகையால் பெட்டி செய்து துணி எதுவும் போர்த்தாமல் கொண்டுபோய் அடக்கம் செய்வேன் " என்றான் இரண்டாமவன். அவனுக்கும் அறைவிழுந்தது.

"கள்ளிப்பலகை என்ன சும்மவா கிடைக்கும்? காசு கொடுத்தால்தானே கிடைக்கும் " என்றான். கடைசியாக மூன்றாவது மகனை அழைத்தான் அதே கேள்வியைக் கேட்டான். "நான் உனக்காக செலவேபண்ணமாட்டேன் உன்னை வைத்து பிழைத்துக்கொள்ளுவேன் " என்றான் மூன்றாவது மகன்.

"எப்படி? " என்று கேட்டார் தகப்பன் . "உன்னை துண்டு துண்டாக வெட்டி ஒரு கூடையில் போட்டு அதை தலையிலே சுமந்து ஆட்டுக்கறி " என்று சொல்லி விற்று காசாக்கி விடுவேன் என்றான்.

"நீ தான் என்னுடைய பிள்ளை! அப்படியே விற்று காசாக்கி விடு... ஆனால் அந்த மேலத்தெரு பக்கம் மட்டும் போகாதே! " என்றான்.

"ஏனப்பா? " என்று கேட்டான் மகன்.

"அங்கே இருக்கிறவன் பூரா கடனுக்குக் கேட்பான் கையில் காசு கூட தரமாட்டான்! " என்றார் தகப்பன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்தார் முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன்

(சென்னை)

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் முதலமைச்சர் கருணாநிதியை முன்னாள் மத்திய அமைச்



சர் தயாநிதி மாறன் சந்தித்து உடல் நலம் விசாரித்தார். மதுரையில் தினகரன் நாளிதழ் தாக்கப்பட்ட பிரச்சினையைத்தொடர்ந்து தயாநிதி மாறன் மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். இதன் காரணமாக கருணாநிதி மற்றும் தயாநிதி மாறன் குடும்பத்தினர் உறவில் விரிசல் இருந்து வந்தது.

இந்த நிலையில் கழுத்துவலி மற்றும் முதுகுவலி காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் முதலமைச்சர் கருணாநிதியை தயாநிதிமாறன் மற்றும் அவரது சகோதரர் கலாநிதி மாறன் நேற்று சந்தித்து உடல் நலம் விசாரித்தனர்.

மேலும் மத்திய அமைச்சர்கள் ரி.ஆர்.பாலு, ஆ.ராசா,மாநில அமைச்சர்கள் ஸ்டாலின், கோ.சி. மணி, பொன்முடி, எ.வ.வேலு, சுபதங்க வேலன், மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் என்.வரதராஜன், இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயலாளர் ரி.ராஜா, பி.ஜே.பி.தேசிய செயலாளர் சு.திருநாவுக்கரசர் உள்ளிட்ட பலர் முதலமைச்சர் கருணா நிதி



யைச் சந்தித்து உடல் நலம் விசாரித்ததாக தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

# மனன, பண்ணிசை போட்டி முடிபுகள்

நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி கோயில், மஹோற்சவத்தையொட்டி நடைபெற்ற மனன, பண்ணிசைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றோர் விபரம் வருமாறு,

**தரம்-03 -மனனம்**

ம.மதுமிதா -நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை, ர.மதுசா-கரவெட்டி மாணிக் கவாசகர் வித்தியாலயம், பி.கேதாரணி நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை ஜெ. கௌசிகா கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்

**பண்ணிசை**

ர.மதுசா -கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், சி.உமையாள்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ம.மதுமிதா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை,நெ.நூர்ஜிகா- மணியக்காரன் தோட்டம் பாடசாலை.

**தரம்-4 -மனனம்**

ம.மேகலா- கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்,ர.மகியா- கரணவாய் தாமோதர வித்தியாலயம், சி.விர்த்திகா - யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்,க.சிவகலை- கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்.

**பண்ணிசை**

இ.சைந்தவி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,யோ. சந்தியா- வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை,தே.இலட்சிகா- கட்டைவேலி மெ. மி.த.க. பாடசாலை.

**தரம்-05 -மனனம்**

மோ சங்கீர்த்தனா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, வ.சங்கீர்த்தனர்-நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, வி.நிதர்சன்- யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்.

**பண்ணிசை**

ஜெ.லாவண்யா- நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை, சி.நிதர்சனா- கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி, பி.உஷாளினி-கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி.

**தரம்-6 மனனம்**

செ.ராஜசுகந்தன்- உடுப்பிட்டி அ.மி கல்லூரி,கு. நிவேஜா- வட மத்திய மகளிர் கல்லூரி. தே.கலைமகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ,யோ.எழிலரசி கரவெட்டி விக்னேஸ்வரக்கல்லூரி.

**பண்ணிசை**

க.காயத்திரி-கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி,ஸ்ரீ.விதுசன்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கு.கௌரி பாலன் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,இ.நிருபா- கரவெட்டி விக்னேஸ் வரக் கல்லூரி

**தரம்-7 மனனம்**

நே.இராஜமனோகரி- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், சா.கௌரிஷா- வட மத்திய கல்லூரி, க.பிரியங்கா -உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**பண்ணிசை**

கு.தர்சலா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கி. அமிர்தவர்ஷன்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,ர.விஷ்ணுகா- கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி ,செ.பிருந்திகா- கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி.

**தரம்-8- 9 மனனம்**

ஸ்ரீ.சாகிர்த்தியா- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ச.கஜீபா- உடுப்பிட்டி மகளிர் கல் லூரி, மு.சிவானந்தி- உடுப்பிட்டி மக ளிர் கல்லூரி.

**பண்ணிசை**

த.தர்சிகா- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,ந.வனிதா- கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி, த.துவாரகன்- உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

**தரம்-10-11 பண்ணிசை**

க.தேன்மொழி-கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி , வி. விஜயதீபா- இமையாணன் அ.த.க. பாடசாலை,த.சாதனா-நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யோ.அஞ்சலா- தேவரையாளி இந்துக் கல்லூரி.

**தரம்-12-13 மனனம்**

ப.ரசானி-உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, ந.இரவிச்சந்திரிகா- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், க.பாமினி-உடுப்பிட்டி அ.ம.கல்லூரி.

**பண்ணிசை**

மு.நீதா-நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,சி.தர்சிகா-கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி, த.இந்திகா- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,க.பிரியங்கா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

(அ)

## இராசிபலன்

*19.05.2008*
*(வைகாசி, 6திங்கட்கிழமை)*
*சதுர்த்தசி காலை 6.01 மணிவரை*
*விசாகம் பின்னிரவு 3.40 மணிவரை*
*இராகுகாலம் 7.22-8.52 மணிவரை*
*சுபநேரம் 11.52-1.22 மணிவரை*
*வைகாசி விசாகம், பூர்ணை விரதம்*
*வற்றாப்பளை கண்ணகை பொங்கல்*

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம், செய்தொழில் விருத்தி, தேக நலன். |
| இடபம் | திடீர் பயணம், சுகவாழ்வு, சத்துரு ஜெயம், காரிய நன்மை. |
| மிதுனம் | குடும்பக்கவலை, தொழில்நன்மை, முயற்சி தாமதம், சிறுவியாதி. |
| கடகம | மனச்சோர்வு, சுப செலவு, கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு. |
| சிங்கம் | இனிய சம்பவம், சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, . |
| கன்னி | மாதர் நட்பு, வீண் விவாதம், காரிய தாமதம், திடீர் நன்மை. |
| துலாம் | ஜனவசியம், நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | பிதா சிந்தை, உணர்ச்சி வசப்படுதல், உஷ்ண வியாதி. |
| தனுசு | கலந்துரையாடல், தெய்வதரிசனம், தொழில்சிந்தை, காரியஅனுகூலம். |
| மகரம் | நிலை மாற்றம், சுப நிகழ்ச்சி, கடின உழைப்பு, கீர்த்தி. |
| கும்பம் | புதிய திட்டமிடல், அச்சமான நிலை, பொருள் விரயம். |
| மீனம் | போசனசுகம், உடல்நலக்குறைவு, முயற்சிதடங்கல், பிரயாண பயம். |

வளவன்



நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினரான ஊர்காவற்றுறை நீதி மன்ற நீதிபதி திருமதி ஜோய் மகாதேவன், வித்தியாலய அதிபர் ஜோ. எ.பங்கிராஸ், மானிப்பாய் சென் ஆன்ஸ் அதிபர் அருட்சகோதரி அழகேஸ்வரி ஆகியோர் பாடசாலை சமூகத்தினரால் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# காரைநகர் குருக்களுக்கு தமிழகத்தில் பவள விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணற்காடு அருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரியம்மன் தேவஸ்தான பரம்பரை பிரதம குரு ஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்களுக்கு தமிழகத்தில் பவள விழா நடாத்தப்படவுள்ளது.

இதற்காக குருக்கள் இந்தியா பயணமாகியுள்ளார். இவரை கொழும்பில் வைத்து கே. கே. சுப்பிரமணியம் உட்பட பல சமய அபிமானிகள் வழி அனுப்பி வைத்துள்ளனர். (அ-5)

# ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய வருடாந்த உற்சவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கிழக்கு முதலாம் வட்டாரம் அருள்மிகு ஸ்ரீ ஆதிவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெறவுள்ளது. இவ்வுற்சவத்தில் யூன் மாதம் 7ஆம் திகதி 108 சங்காபிஷேகம் இடம்பெறும். (அ-72)

# கடற்றொழில் பயிற்சி நெறி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள ஏழு சங்கங்களைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாருக்கும் அண்மையில் மூன்று நாட்களுக்கு கடலுணவு பதனிடலும் பாதுகாத்தலும், வலை உபகரணங்களை தயாரித்தல் திருத்துதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இதன்போது பயனாளிகளுக்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டது. இப்பயிற்சி நெறி ஜி-ரி-சற் நிறுவனத்தின் உதவியுடன் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் அனுசரணையுடன் கடற்றொழில் மற்றும் இயந்திரவியல் பயிற்சிக் கல்லூரி அதிபர் செபஸ்தியாம்பிள்ளையால் நடாத்தப்பட்டது. (அ-72)

# தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், தேசிய சேமிப்பு வங்கி கிளையின் இடமாற்ற நிகழ்வு 21ஆம் திகதி புதன்கிழமை மு.ப 9மணிக்கு மானிப்பாய் சுந்தர்ஷன் கட்டிடத் தொகுதியில் முகாமையாளர் ப.சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் வலி தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபிணி வரதலிங்கம், சங்கானை வலி மேற்குப் பிரதேச செயலக கணக்காளர் திருமதி இராஜேஸ்வரி உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வுள்ளனர். வரவேற்புரையை யாழ். தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் பி.அருளானந்தமும் ஆசியுரையை மருதடி விநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ. ப. ஜெயக்குமாரக் குருக்கள் மற்றும் வண. ஏ.எஸ் தேவகுணானந்தன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (இ)

# கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில்- இருபாலை வீதி, அச்சுவேலி-நவக்கிரிவீதி, திருநெல்வேலி- புத்தூர் வீதி, வீரவாணி-வாதரவத்தைவீதி ஆகிய நான்கு வீதிகளையும் யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி திணைக்களம் விரைவில் செப்பனிடவுள்ளது

திணைக்கள நிதியில் செப்பனிடப்படவுள்ள இவ்வீதிகள் தொடர்பாக மதீப்பீடுகள் மேற் கொள்ளப்பட்டு திணைக்கள தலைமையகத்தின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார் .

அச்சுவேலி -இடைக்காடுபாடசாலை வீதி திருத்த வேலையையும் கருத்தில் எடுக்குமாறும் கோப்பாய் பிரதேச செயலர். சி.ஏ. மோகன்றாஸ் யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தை கேட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் -பருத்தித்துறை வீதி திருத்த வேலை இருபாலையிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபை கோப்பாய் பிரதேச செயலரிடம் தெரிவித்துள்ளது. (அ-5)




ஊர்காவற்றுறையில் அண்மையில் நடைபெற்ற கடற்றொழில் பயிற்சியின் போது ஆண், பெண் இருபாலரும் பயிற்சியில் ஈடுபடுவதையும் அருகில் கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் பயிற்சி கல்லூரி அதிபர் நிற்பதை படத்தில் காணலாம்.

# துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இலங்கைவங்கியின் பொன்விழாவை முன்னிட்டு தமிழ்புத்தாண்டு நிகழ்வாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடாத்தும் 20x20 மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை திருநாவலூர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளதாக பருத்தித்துறை இலங்கை வங்கி தெரிவித்துள்ளது .

விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் என். சிவரட்ணம்,சிறப்பு விருந்தினராக பருத் தித் துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-52)

# தீ மிதிப்பு உற்சவம்

கந்தர் மடம் அருள்மிகு செல்வ நாக பூசணி அம்பாள் திருக்கோயிலில் தீ மிதிப்பு உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி பூசையைத் தொடர்ந்து தீ மூட்டுதல் நடைபெற்று 3 மணிக்கு தீமிதித்தல் இடம் பெறவுள்ளது. (அ-7)

# வைகாசி விசாக திருவிழாவும் பொங்கலும்

(யாழ்ப்பாணம்)

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் விசாக திருவிழாவும் பொங்கலும் இன்று திங்கட்கிழமை 10 மணிக்கு சகல சுவாமிகளுக்கும் அபிஷேகம் இடம் பெற்று பொங்கல் நடைபெறவுள்ளது. மாலை4மணிக்கு திருவூஞ்சல் இடம் பெற்று அம்பாள் வெளிவீதியுலா வரும் காட்சி இடம் பெறவுள்ளது என தேவஸ்தானத் தலைவர் தி.ரவீந்திரநாதன் தெரிவிக்கிறார். (அ-136)

# பொது அறிவுப் பரீட்சை

நயினாதீவு ஸ்ரீபிடாரி அம்பாள் சனசமூக நிலையம் வருடாந்தம் நடாத்தும் தரம் 1தொடக்கம் தரம் 13 வரையுள்ள மாணவர்களுக்கான பொது அறிவுப்பரீட்சை இல-17 இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலத்தில் நடைபெறும் என ஸ்ரீபிடாரி அம்பாள் சனசமூக நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

## யாழ்.செய்திகள்

# மருந்தாளர்களை நியமிக்க அமைச்சு பணிப்புரை

(கொழும்பு)

யாழ். போதான வைத்தியசாலையில் நிலவி வரும் மருந்தாளர் வெற்றிடங்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சு வைத்தியசாலை பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே இப்பணியில் ஈடுபட்டிருக்கும் பிற சேவைப் பணியாளர்களில் இவரை தெரிவு செய்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கலாமெனவும் அவ்வறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# வைகாசிப் பூரணை தினம்

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதி வைகாசிப் பூரணை தினம் இன்று திங்கட்கிழமை மலை5.30மணிக்கு சமிதி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (அ-7)

# சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரை தொடர் 07 எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பொது மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி பி.லக்ஸ்மன் தலைமையில் இடம் பெறவுள்ள இவ் விரிவுரையினை அங்கொட மனநல வைத்தியசாலை மனநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாசன் 'தற்கணிப்பும் சுக நலமும்' எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொது மக்கள் பல்கலைக்கழக சமூகத்தினர் வருகை தந்து பயன் பெற முடியு மென புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (அ)

# வருடாந்த கூட்டமும் நிர்வாக சபை தெரிவும்

(வல்வெட்டித்துறை)

கணபதி படிப்பகத்தின் 41ஆவது வருடாந்தக் கூட்டம் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. அக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக பூ.அகமணிதேவர், உப தலைவர்களாக சு.ஞானச்சந்திரன் மற்றும் ச.பிரதீபன், செயலாளராக லோ. நாகராஜன், உப செயலாராக க.செந்தூரன், பொருளாளராக சி.மதுசூதன், செயற்குழு உறுப்பினர்களாக ம. உதயகுமார், மோ.கவிராஜ். உ.நிஷாந்தன்,த.சிவகுருநாதன்,த.ஆனந்த், ம.தினேஸ், மோ. பிரதீப் ஆகியோரும் காப்பாளர்களாக கு.அமிர்தலிங்கம், சூ.சே.குலநாயகம், வைத்திய கலாநிதி சி. சோதிமயம் ஆகியோரும் கணக்காய்வாளராக ந.சிவனருள் காந்தியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-6)

# பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி தடங்கள் புளியடி முருகமூர்த்தி கோயில் மகோற்சறவ காலப் போட்டிகளில்வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை செவ்வாய் கிழமை பி.ப 2மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் வல்வை சிவ குரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.



நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், சிறப்பு விருந்தினராக நெல்லியடி மத்திய மகாவித்தியால அதிபர் செ. செந்தூரராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் பிரம்ம ஸ்ரீ கௌரிபாலக் குருக்கள் ஆசியுரையை வழங்கவுள்ளார்.

மேலும், மஹோற்சவகால பஜனை நிகழ்வில் பங்கு பற்றிய மாணவர்கள் பிரதேச மட்டத்திலான சமய அறிவுத் தேர்வில் சித்தியடைந்தவர்கள், கரவெட்டிக் கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட மனன பண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் ஆகியோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (இ)




யுனிசெவ் அனுசரனையுடன் வலிகாமம் கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவால் பாடசாலை செல்லாத இடைவிலகிய மாணவர்களுக்கு கல்வி வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் கடந்த 16ஆம் திகதி சுன்னாகம் சுபாபதிப்பிள்ளை முகாமில் நடாத்தப்பட்ட விழிப்பணர்வுக் கருத்தரங்கில் வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்வி செயற்திட்ட அலுவலர் ந.சண்முகராசா கல்வியின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றுற்வதையும் யுனிசெவ் செயற்திட்ட அலுவலர் பிரட்றிக், உதவி செயற்றிட்ட அலுலர் யோ. தயாபரன், எழுத்தறிவூட்டல் ஆசிரியர் த.மகாதேவன் அமர்ந்திருப்பதையும் 1ஆவது படத்திலும் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை 2ஆவது படத்திலும் காணலாம்.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி ஜி.ஆர்.ஹன்டி ஞாபகார்த்த இருதய சிகிச்சை விடுதியை சிரேஷ்ட பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.நாகேந்திரா திறந்து வைப்பதையும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ்,யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன்,இருதய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் பி.லக்ஷ்மன் ஆகியோர் விடுதியைப் பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம் (படங்கள் :- யதார்த்திகன்)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் நாளை காலை 9 மணிக்கு கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் மோகனதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ச)

## ஜனாதிபதி மகிந்த ஜூனில் லண்டன் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜூன் மாதம் பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

அணிசேரா நாடுகளின் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் பொருட்டே பிரித்தானியாவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயணம் மேற்கொள்ளவுள்ளார். (ச-5)


## அறிவித்தல்

**ஜெஸ்வின் அன்ட் பருத்தித்துறைப் பங்கு கணினிப் பயிற்சியகம் என்ற பெயரில் செயற்பட்டு வந்த கணினிப் பயிற்சியகம் 17.05.2008 இல் இருந்து இணைந்து செயற்பட்டு வந்த பருத்தித்துறை புனித தோமையார் ஆலய நிர்வாக சபையிலிருந்து விலகி புதிய நிர்வாகத்துடன் பெயர் மாற்றப்பட்டு ஜெஸ்வின் அன்ட் பருத்திநகர் கணினிப் பயிற்சியகம் (JPCI) எனப் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடனும், மக்கள் வங்கியின் ஆதரவுடனும் பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவில் தொடர்ந்து செயற்படும் என்பதை பயிற்சியகத்துடன் தொடர்புடைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், நலன்விரும்பிகள், மாணவர்களுக்கு அறியத் தருகின்கிறோம்.**

**ஜெஸ்வின் அன்ட் பருத்திநகர் பயிற்சியக 2008 ஆம் ஆண்டின் புதிய நிர்வாகக் கட்டமைப்பில் மாணவர் அபிவிருத்திக் குழுவின் செயற்பாடுகள்,**

- ❖ கிராம சேவகர், பங்குத் தந்தையின் சிபார்சுக் கடிதங்களுடன் கணினிப் பயிற்சியினை மேற்கொள்ள விரும்புபவர்களுக்குத் திட்ட அடிப்படையில் இலவசக் கணினிப் பயிற்சி நெறி.
- ❖ தூரதேச மாணவர்களுக்கான போக்குவரத்துப் படி.
- ❖ மக்கள் வங்கியினூடாகப் பயிற்சி பெறும் மாணவர்களுக்குச் சேமிப்புப் புத்தகம் வழங்கல்.
- ❖ மாதாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கல் (கிராம சேவகர் சிபார்சுக்கமைய)
- ❖ கல்வியில் சித்தி எய்தியவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கல்.
- ❖ கடன் அடிப்படையில் கணினி இயந்திரம் வழங்கல்.
- ❖ தொழில் முயற்சிகளை மேற்கொள்ள வசதியமைத்தல்.
- ❖ தகவல் தொழில்நுட்ப இலவசக் கருத்தரங்குகளைப் பாடசாலை மாணவர்களுக்கு உரிய பாடசாலைகளில் நிகழ்த்தல்.
- ❖ தகவல் தொழில்நுட்ப நூலக வசதிகள் வழங்கலும் சனசமூக நிலையங்கள் ஊடாக நூல்கள் வழங்கலும்.
- ❖ ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்கல்.
- ❖ செவிப்புலன் அற்றோரை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சிகளை வழங்கல்.
- ❖ ஊனமுற்றோரை முன்னேற்றுதல்.
- ❖ இளைஞர், யுவதிகளுக்கான சக்திப்படுத்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளல். (விளையாட்டு நிகழ்வுகள்)

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளில் பயன்பெற விரும்புவோர் எமது நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி பணிப்பாளர் S.I.S.செயலாளர்

ஜெஸ்வின் அன்ட் பருத்திநகர் கணினிப் பயிற்சியகம்,
2 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை. (C-1147)


## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இடம் பிடிக்க இல.-பாக்.இடையே போட்டி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவத்துக்காக நாளை மறுதினம் நடைபெறவுள்ள தேர்தலில் ஆசிய நாடுகளுக்கான நான்கு இடங்களில் ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் கடும் போட்டி நிலவும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவத்துக்காகப் போட்டியிடும் ஆறு நாடுகளில் பஹ்ரைன், கிழக்குத் திமோர் ஆகிய நாடுகளின் இடங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே இலங்கையும் பாகிஸ்தானும் போட்டியிடுவதாக வேறு சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கை, பாகிஸ்தானுடன் போட்டியிடுமானால் தெற்காசியாவில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான இருதரப்பு உறவில் பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் அண்மைக்காலமாக வலுவடைந்து வரும் இராஜதந்திர உறவுகளில் இந்தப் போட்டி பாதிப்பினை உண்டுபண்ணலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய அமைச்சர்களின் செயற்குழுக் கூட்டத்தில் பொதுநலவாய நாடுகளின் அங்கத்துவத்திலிருந்து 6 மாத காலம் இடைநிறுத்தத்துக்குப் பின்னர் மீண்டும் பாகிஸ்தானை சேர்த்துக் கொள்வதற்கான ஆதரவை இலங்கை உறுதியாக வெளிப்படுத்தியிருந்தது.

கடந்த 6 மாத காலத்திற்கும் மேலாக பொதுநலவாய நாடுகளிலிருந்து பாகிஸ்தானை இடைநிறுத்தியமைக்கு எதிராக இலங்கை மேற்கொண்ட இறுதிக் கட்ட முன்னெடுப்பாக இது கருதப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஆசிய நாடுகளுக்கான 4 உறுப்புரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பஹ்ரைன், கிழக்குத் திமோர், யப்பான், பாகிஸ்தான், தென்கொரியா மற்றும் இலங்கை ஆகிய ஆறு நாடுகள் போட்டியிடுகின்றன.

இதற்கிடையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு இடம் கிடைப்பது உறுதியானது என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார் (ச-5)


### தேவை

குவைற்.டுபாய்.கட்டார்.போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் Salesman (supermarket) Security guard, Helpers, House maids இன்னும் பல வேலைவாய்ப்புகள். ஊடனடியாக போகக்கூடியதாக உண்டு மேலதிக விபரங்களுக்கு. **LOTUS JOBS BANK**. No.10,Rudra Mawatta Colombo 06. Tp: 0112361336.

### வேலை தேவை

தற்காலிக வான் ஓட்டுநரான 60 வயதுடையவருக்கு யா/மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீட்டில் இரவு, பகல் காவல் புரியும் வேலை தேவை.

*(வீட்டு வேலையும் செய்யக் கூடியவர்)*

தொடர்புக்கு:-
**K.சுபாகரன்**
96/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (1220)

### ஆனந்தி திருமண சேவை

**மணமகள் தேவை**

விவசாயத் திணைக்களத்தில் பணிபுரியும் B.B.A.பட்டம் பெற்ற1977-ல் பிறந்த பூரட்டாதி நட்சத்திரம், கிரகபாவ சங்கியை 43 1/4. 6 ஆம் இடத்தில் செவ்வாயுடைய ஆண் மகனுக்கு ஏற்ற மணமகளை விரும்புகின்றோம். நேரடியாக, அஞ்சல் மூலம், 021 222 8708 தொலைபேசி ஊடாக,

**ஜோதிடர் V.A.சிவராசா**
ஆனந்தி திருமண சேவை
56, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள். (1202)


## சிகரெட்டுக்களை உணவாக உண்டும் சிறுநீரை அருந்தியும் உயிர் பிழைத்தேன்

(பீஜிங்)

சீனாவைக் கடந்த வாரம் தாக்கிய 7.9 ரிச்டர்அளவான பூமி அதிர்ச்சியில் சிக்கிப் புதையுண்டு 100 மணிநேரத்தின் பின் உயிருடன் மீட்க்கப்பட்ட 46 வயதான நபர் சிகரெட்டுக்களையும் நப்கின் கடதாசிகளையும் உண்டும் தனது சிறுநீரை அருந்தியும் உயிர் பிழைத்ததாகத் தெரிவித்தார்.

தனது வலது கரத்தைத் தவிர ஏனைய பகுதிகள் அனைத்தும் கட்டட இடிபாடுகள் இடையே சிக்கியிருந்ததாகவும் இந் நிலையில் தனது காலணியைப் பயன்படுத்தி தனது சிறுநீரைச் சேகரித்து அருந்தியதாகவும் பெங்லிஜுன் என்ற இந்த நபர் கூறினார்.

கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை பூமி அதிர்ச்சி இடம்பெற்ற சமயம் தான் பெய்சுவான் நகரிலுள்ள மருந்தகக் கம்பனிக் கட்டடம் ஒன்றில் இருந்ததாக அவர் தெரிவித்தார்.

பூமி அதிர்ச்சி ஏற்பட்டபோது எனது வலது கரத்தைத் தவிர ஏனைய பகுதிகள் இடிபாடுகளுள் சிக்கியதால் அசைய முடியாத நிலை ஏற்பட்டது.

நான் முதலில் எனது வலியைக் குறைக்க முயற்சித்தேன். அதன் பின்னர் எவ்வாறு உண்பது, குடிப்பது என்பது தொடர்பில் சிந்திக்க ஆரம்பித்தேன்.

எனது காற்சட்டைப் பைக்குள் தேடியபோது அரைப் பைக்கெற் சிகரெட்டுக்களும் சில துண்டு நப்கின் கடதாசிகளும் சிக்கின. நான் சிகரெட்டுக்களை உடைத்து அதில் உள்ள தூளை உட்கொண்டேன் என்றார். (ச-5)

## ஈரான் ஜனாதிபதிவரை சென்ற கிழக்கின் முதலமைச்சர் நியமனம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவை நியமிக்க ஜனாதிபதி மகிந்தவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஈரான் ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய வருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிபடைந்த பின்னர் முதலமைச்சராகப் பிள்ளையானே நியமிக்கப்படவுள்ளார் என்ற தகவல் அரசியல் வட்டாரங் களில் பரபரப்பாக அடிபட்டபோதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் இல்லாத காரணத்தினால் தமது நிலை குறித்து மூஸ்லிம் அமைச்சர்கள் தமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து மந்திராலோசனை நடத்தினர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் பிள்ளையானே முதலமைச்சராக நியமிக்கப்படுவார் என்ற உறுதியான ஊகங்கள் ஆளும் கட்சி வட்டாரங்களிலிருந்து கிடைக்கப் பெற்றதனையடுத்து அதற்குள் அதனைத் தடுத்து நிறுத்த எண்ணிய முஸ்லிம் அமைச்சர்கள், வெளிநாடுகளின் மூலம் இராஜதந்திர அழுத்தத்தை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவது என முடிபெடுத்தனர்.

இதனையடுத்து ஈரான் தூதுவரைச் சந்தித்த வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹுசைன் பைலா, முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள நிலையைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொண்டார்.

ஈரான் ஜனாதிபதியின் வருகையாலேயே ஆளும் மகிந்த ராஜபக்ஷ கூட்டணிக்கு கிழக்கில் அதிக முஸ்லிம் வாக்குகள் கிடைக்கப் பெற்றன. முஸ்லிம் வாக்குகளில் வெற்றி பெற்று விட்டு இப்போது முஸ்லிம்களுக்கே மகிந்த ராஜபக்ஷ துரோகம் இழைக்கப் பார்க்கின்றார்.

இந்த விடயத்தை ஈரான் வெளி. விவகார அமைச்சரின் ஊடாக ஈரான் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு அழுத்தம் கொடுத்து முஸ்லிம் சமூகத்திற்கு நீதி பெற்றுத் தர வேண்டும்; எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவை முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்றும் ஈரான் தூதுவரை ஹுசைன் பைலா கேட்டிருக்கின்றார். இதற்குத் தாம் முயற்சி செய்வதாக தூதுவர் உறுதியளித்திருந்தார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

# நியூசிலாந்துக் கல்வி-01

தெற்கு பசிபிக் பகுதியில் அமைந்துள்ள இயற்கை எழில் மிகுந்த நாடு நியூசிலாந்து. 38 லட்சம் மக்கள் தொகையை கொண்டிருக்கிறது இந்த நாடு. பசுமையான விளைநிலங்களையும் மட்டுமன்றி பாலைவனங்களையும் கொண்டிருக்கிறது நியூசிலாந்து. ஐரோப்பிய கலாசாரத்தைக் கொண்ட நியூசிலாந்து மக்கள் நட்புணர்வு, தன்னம்பிக்கை மற்றும் தனி மனித சுதந்திரம் கொண்டவர்களாக திகழ்கிறார்கள்.

மிகச் சிறப்பான தரம் வாய்ந்த கல்வியைத் தரும் நியூசிலாந்தில் படிப்பதற்கான பாதுகாப்பான சூழல் நிலவுவது இதன் சிறப்பம்சம் எனக் கூறலாம்.

### நியூசிலாந்து கல்வியின் சிறப்பு

❖ புதிய சிந்தனைகளுக்கு மதிப்புத் தருவதோடு சுய சிந்தனையாளர்களை ஊக்குவிப்பதிலும் நியூசிலாந்து கல்வியாளர்கள் முதன்மை பெற்றவர்கள்:

❖ நியூசிலாந்தின் கல்வி முறை பிரிட்டனின் கல்வி முறையைத் தழுவியது.

❖ மிகக் குறைவான மக்கள்தொகையைக் கொண்ட நாடு என்பதால் பல்கலைக் கழகங்களில் ஆசிரியர், மாணவர் இடையேயான உறவானது வெளிப்படையாகவும் நெருங்கியதாகவும் இருக்கிறது. இதனால் முழுமையான கல்வி பெறுவது எளிதாகிறது.

❖ பல்வேறு கலாசார மக்கள் இங்கு வாழ்வதால் நியூசிலாந்து மக்களின் இயல்பான நட்புணர்வு, அவர்களின் எளிய வாழ்க்கை நெறிகள், திறந்த மனதுடைய போக்கு ஆகியவை வெளி நாட்டு மாணவருக்கு பாதுகாப்பான மற்றும் வெகுவாக நமக்குப் பிடிக்கக் கூடிய கல்வியை உறுதி செய்கிறது.

**அறிவுக்கலசம்**

❖ நியூசிலாந்தில் தரப்படும் பயோடெக்னாலஜி, பாரன்சிக்சயன்ஸ், மரைன் இன்ஜினியரிங் போன்ற படிப்புகள் சர்வதேச தரத்தில் மிக மேம்பட்டவை.

❖ கல்வி நிறுவனங்களுக்கு அருகில் தங்கி பயிலும் வாய்ப்பு, சிறப்பான போக்குவரத்து வசதிகள், பொழுதுபோக்கு அம்சங்கள், உயர்ந்த தரத்திலான உணவு விடுதிகள் போன்றவற்றை நியூசிலாந்தில் மட்டுமே காண முடியும்

❖ ஸ்கீயிங், கெனோயிங், சர்பிங், டிரம்பிங், மவுண்டன் பைக்கிங் போன்ற பரவசமூட்டும் இயற்கையை ஒட்டிய விளையாட்டுக்கள் கூடுதலாக நமக்குக் கிடைக்கின்றன

❖ படிக்கும் போதே சம்பாதிக்கும் வாய்ப்புகளை நியூசிலாந்து பட்டப்படிப்புகள் அளிக்கின்றன. எனினும் பட்ட மேற்படிப்பின் போது இது அனுமதிக்கப்படுவதில்லை.

### கல்வி முறை

நியூசிலாந்தின் கல்வி முறை 1870களில் பிரிட்டனின் பல்கலைக்கழகங்களின் மாதிரியில் உருவாக்கப்பட்டது. இங்கு அரசால் 8 பல்கலைக் கழகங்கள் நடத்தப்படுகின்றன. சிறப்பான கல்வி முறைக்காகவும்தரமான ஆராய்ச்சிச் சூழலுக்காகவும் நியூசிலாந்து கல்வி உலகப் புகழ் பெற்றது.

பல்கலைக்கழகங்கள் தவிர பொலிடெக்னிக் கல்லூரிகள், இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னோலஜி, தனியார் கல்வி நிறுவனங்கள் நியூசிலாந்தில் செயற்படுகின்றன. படிக்கும் வாய்ப்பைத் தாண்டி இங்கு பணிபுரியும் வாய்ப்பும் தரப்படுகிறது. இது தொடர்பான தகவல்களை www.immigration.govt.nzதளங்களிலும் பார்த்துக் கொள்ளலாம்

### கட்டணம் எப்படி?

நியூசிலாந்தில் கல்விக்காக ஆகும் செலவு பிற வளர்ந்த நாடுகளில் படிப்பதற்காக ஆகும் செலவை விட குறைவுதான். இங்கு பெறப்படும் கல்விக் கட்டணத்தில் பாதித் தொகை மாணவர்களின் சுகாதாரம், வரி, மொழி மற்றும் கல்வியக வசதிகளுக்காகப் பெறப்படுகிறது. கல்விக் கட்டணத்தை முதலில் செலுத்த வேண்டும். பல்கலைக்கழகத்தை மாற்றவேண்டிய சூழல் ஏற்பட்டால் விண்ணப்பத் தொகை மற்றும் பரிசீலனைத் தொகை தவிர பிற கட்டணங்கள் திருப்பித் தரப்படும். ஆனால் படிப்பு தொடங்கியபின்பு திருப்பித் தரப்படமாட்டாது.

பட்டப் படிப்புக்கு ஆண்டுக்கு ரூ.12லட்சத்து 60ஆயிரம் முதல்16லட்சம் வரை செலவாகிறது. பட்ட மேற்படிப்புக்கு ரூ.20 லட்சம் வரை ஆகலாம். தங்குவதற்கு 9லட்சம் வரை செலவாகிறது. நியூசிலாந்தில் உள்ளூர் தொலைபேசி அழைப்புக்களுக்குக் கட்டணம் கிடையாது.

**அமிர்தன்**

(தொடரும்)

# மருத்துவம் சார்ந்த இன்ஜினியரிங் படிப்பில் உள்ள வாய்ப்புகள்

பொறியியல் படிப்புகளில் ஏற்கனவே உள்ள துறைகளுடன். தொழில்நுட்ப வளர்ச்சிக்கு கேற்ப நாளுக்கு நாள் புதிய துறைகள் அறிமுகமாகி வருகின்றன. அதற்கேற்ப வேலை வாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன. அதனால் இது போன்ற படிப்புக்களைப் படித்து முடித்தவுடன் வேலை கிடைத்து விடுவதால் இதில் சேர்வதற்கு மாணவர்கள் மத்தியில் கடும் போட்டி நிலவுகிறது. அது போன்ற ஒரு துறை யில் பார்மாசூட்டிக்கல் இன்ஜினியரிங்கும் ஒன்றாகும். கெமிக்கல் இன்ஜினியர்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பு வழங்கும் ஓர் துறையாக பார்மாசூட்டிக்கல் இன்ஜியரிங் உள்ளது.

இது தவிர பார்மாசூட்டிக்கல் படிப்பை தேர்வு செய்து படித்தவர்களுக்குத் தேவை அதிகமாக உள்ளது. மூலப்பொருட்களை இயற்பியல், வேதியியல், உயிர்வேதியியல் முறையில் மதிப்புமிக்க மருந்துப் பொருட்களாக மாற்றுகின்றனர் பார்மாசூட்டிக்கல் இன்ஜினியர்கள் இதற்கு தேவைப்படும் தொழிற்சாலைக் கருவிகளை வடிவமைத்து உருவாக்கி, இயக்குவதில் அவர்கள் பங்களிக்கின்றனர். புதிய மருந்துகளின் செயல்திறன், பக்கவிளைவுகளைக் கண்டறிய உதவும் நவீன சொப்ட்வெயார்களை இயக்குவது பற்றியும் அவர்கள் அறிந்துள்ளனர். கெமிஸ்ட் மற்றும் பார்மாகாலஜிஸ்ட்டுடன் இணைந்து ஆய்வுப்பணிகளை இவர்கள் மேற்கொள்கின்றர்.

### அணு மருத்துவம் (நீயூக்ளியர் மருத்துவம்)

இயற்பியல், வேதியியல், கணிதம், கம்பியூட்டர் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவம் தொடர்பான பாடங்கள் அணு மருத்துவத்தில் கற்றுத் தரப்படுகின்றன. நோயை அறியவும் குணப்படுத்தவும் கதிர்வீச்சை பயன்படுத்துகின்றனர். நோய் அறிதலுக்கு பல்வேறு முறைகள் புழக்கதில் இருந்தாலும் அணு மருத்துவத்தின் மூலம் உடம்பில் உள்ள முக்கிய உறுப்புகளின் அமைப்பு மற்றும் செயற்பாடு குறித்து துல்லியமானத் தகவல்களை பெற முடிகிறது.

அணு மருத்துவ முறைகள் பாதுகாப்பானவை. இதனால் நோயாளிகளுக்கு எந்த சிரமமும் ஏற்டுவதில்லை. மயக்க மருந்தும் இதற்கு அவசியமில்லை. அணு மருத்துவ நிபுணர்கள் மருத்துவர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். இவர்களின் முக்கிய பணிகள் என்ன?

1.கதிரியக்க மருந்துகளைத் தயாரித்து நோயாளிகளுக்கு செலுத்துவது.


2.நவீன கதிர்வீச்சுக் கருவிகளின் உதவியுடன் நோயாளிகளை படமெடுப்பது.

3.கம்பியூட்டர் உதவியுடன் படத்தின் தரத்தை மேம்படுத்துவத்.

4.லாப்களில் உயிரி மாதிரிகளைச் சோதனை செய்வது.

5.நோயாளியைப் பற்றிய மருத்துவக் குறிப்புக்களை டாக்டருக்கு அனுப்பி வைப்பது போன்றப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

உறுப்புகளை படமெடுக்க, உயிரி மாதிரிகளை சோதிக்க, நோய்க்கு சிகிச்சை அளிக்க, 'ரேடியோடு பார்மாசூட்டிக்கல்' கதிரியக்க பொருட்களை பயன்படுத்துவதை அணு மருத்துவத் தொழில் நுட்பம் என்கின்றனர். அணு மருத்துவ வல்லுனர்கள், டாக்டர்கள், தாதியர்கள், கம்பியூட்டர் நிபுணர்களை உள்ளடக்கிய மருத்துவ குழுவில் முக்கிய பங்காற்றுகின்றனர்.



கடந்த சில ஆண்டுகளாக இந்தத் துறை பெரும் வளர்ச்சியை சந்தித்து வருகிறது. வேலை வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. நடுத்தர வயதினர், முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதே இதற்கு காரணம். மருத்துவ தொழிற்நுட்பத்தின் வளர்ச்சிகேற்ப அணு மருத்துவத்தின் பயன்பாடும் அதிகரிக்கும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள், ஆய்வு நிறுவனங்களில் அணு மருத்துவ நிபுணர்களுக்கு வேலைவாய்ப்புகள்உள்ளன. தலைமை நிபுணர், ஆராய்ச்சி நிபுணர், ஆசிரியர் போன்ற வாய்ப்புகளும் உள்ளன.

### எலெக்ட்ரோகெமிக்கல் இன்ஜினியரிங்

வேதி ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றுவது குறித்த படிப்பே எலெக்ட்ரோகெமிக்கல் இன்ஜினியரிங். இந்த செயல்முறைக்குத் தேவையான வடிவமைப்பு, கட்டமைப்பு, கட்டுப்பாடு, திட்டமிடல் போன்றவை குறித்தும் இந்த படிப்பில் கற்றுத்தரப்படுகிறது வேதி ஆற்றல், மின் ஆற்றல் இடையேயான தொடர்பு, மின் வேதியலில் அடிப்படை பற்றி எலெக்ட்ரோ கெமிக்கல் இன்ஜினியரிங் விளக்குகிறது பியூவல் செல்ஸ், பயோ சென்சர்ஸ், எலெக்ட்ரோ கெமிக்கல் சென்சர்ஸ் தொழில் நுட்பம் போன்ற வளரும் துறைகளின் எலெக்ட்ரோ கெமிக்கல் இன்ஜினியரிங் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன.

### பயோ மெடிக்கல் இன்ஜினியரிங்

இன்ஜினியரிங் துறையின் தத்துவங்களையும் தொழில்நுட்பங்களையும் மருத்துவத்துறைக்கு பயன்படுத்துவதேபயோ மெடிக்கல் இன்ஜினியரிங் எனப்படுகிறது. பயோ மெடிக்கல் இன்ஜினியர்களால் உருவாக்கப்படும் கருவிகளும் தொழில்நுட்பங்களும் மருத்துவர்கள் நோயை விரைவாகவும் சரியாகவும் கண்டு பிடிக்க உதவி செய்கிறது. பின்னர் சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கவும் வழிவகுக்கிறது.

மருத்துவத் துறையில் அதிநவீன கருவிகளான இ.சி.ஜி.,இ.இ.ஜி., இ.எம்.ஜி., பிளட் கெமிஸ்ட்ரி சென்சர்கள், சி.டி மற்றும் எம்.ஆர்., ஸ்கேனர்கள், மெக்கானிக்கல் ரெஸ்பிரேட்டர், கார்டியாக் பேஸ்மேக்கர் மற்றும் கிட்னி டயாலிசிஸ் போன்ற கருவிகள் உபயோகப்படுகின்றன.

இன்றைய கால கட்டத்தில் ஒரு துளி கூட ரத்தம் சிந்தாமல் அறுவை சிகிச்சைகள் செய்யப்படுவதற்கு பயோ இன்ஜினியர்கள் உருவாக்கிய லேசர் சார்ஜரி கருவிகளே காரணமாக இருக்கின்றன. அவர்கள் உருவாக்கிய பல்வேறு மருத்துவ கருவிகள் இன்று மருத்துவ உலகையே புதுவிதமாக மாற்றியிருக்கின்றன.

இக்கருவிகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. உதாரணமாக செயற்கை இருதயம், பேஸ் மேக்கர், செயற்கை வால்வுகள், செயற்கை எலும்புகள், லேசர் அறுவை சிகிச்சை, கிரையோசர்ஜரி அலட்ராசானிக் கருவிகள் போன்றவற்றைச் சொல்லலாம்.


### வேலைவாய்ப்பு

அதிகரித்து வரும் மனிதனின் ஆயுள் காலம், அதிகளவிலான முதியவர்களின் எண்ணிக்கை காலத்திற்கேற்பத் தோன்றும் புதிய புதிய நோய்கள் போன்றவை மருத்துவத்துறையைக் கவர்ச்சிகரமான வியாபார வாய்ப்புகளை உருவாக்கும் துறையாக மாற்றியுள்ளது. இன்சூரன்ஸ் துறையால் தரப்படும் மருத்துவக் காப்பீட்டின் காரணமாக. தொழில்நுட்ப வசதிகளுடைய மருத்துவமனைகளை நாடுவோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. அதிக எண்ணிக்கையில் மருத்துவத் தேவைகளை நாடுபவர்களுக்கு விரைவான பாதுகாப்பான மற்றும் சிறந்த மருத்துவ வசதிகளை தருவதற்கு மருத்துவர்கள் பெரிதும் பயோமெடிக்கல் கருவிகளையும் தொழில்நுட்பங்களையுமே நம்பியுள்ளனர்.

பயோமெடிக்கல் துறையின் செயல்பாடு ஒரு மருத்துவ மனையில் நோயாளிகளை பதிவு செய்வதில் தொடங்கி, நோய் கண்டுபிடிப்பது, சிகிச்சை தொடக்கம் பணம் செலுத்திய பின்பு மருத்துவமனையிலிருந்து வெளியே வரும் வரை இருகிறது. இன்றைய சூழலில் இவ்வசதிகள் இல்லாத மருத்துவமனை களைப் பற்றி கற்பனை செய்வதே கடினமானது. ஒரு நோய்க்கான காரணத்தை கண்டறிய மருத்துவர்கள். எக்ஸ்ரே, ஸ்கேன், பிளட் கெமிஸ்ட்ரி சென்சார்கள் போன்றவற்றை உபயோகிக்கிறார்கள் இதேபோல் சிகிச்சைப்பிரிவில் பயன்படும் உயிர்காக்கும் கருவிகளான பல்ஸ் ஆக்ஸிமீட்டர், ரெஸ்பிரேட்டர், இரத்த அழுத்தம். உடல் வெப்பநிலை போன்றவற்றைக் கண்டறியும் பிசிக்கல் சென்ஸார்கள், எலக்ட் ரோலைட் ஒக்ஸிஸன், கார்பன்-டை-ஒக்சைட், பிஹெச் குளுக்கோஸ் போன்ற இரத்த வேதியில் சென்ஸார்கள் போன்றவை உபயோகிக்கப் படுகின்றன. நோயாளிகளின் உயிர் காக்கும் இந்த கருவிகளையே மருத்துவர்கள் பெரிதும் நம்பியுள்ளனர்.

பயோமெடிக்கல் கருவிகளைத் தயாரிக்கும் நிறுவனங்களான பி.பி.எல், பெல்ஸ் டோன், பயோஎனேபிள், ஜி.இ.ஹெல்த்கேர், எல் அண்ட்டி பிலிப்ஸ், விப்ரோ மெடிக்கல். சீமன்ஸ் போன்றவை பயோ மெடிக்கல் இன்ஜினியர்களை பணியில் அமர்த்துகின்றன. பயோ மெடிக்கல் கருவிகள் அதிக விலை கொண்டதாக இருப்பதோடு தொடர்ந்து பராமரிக்க வேண்டியதாகவும் இருக்கின்றன. மிகப்பெரிய நிறுவங்கள் தங்கள் மருத்துவ மனை வளாகத்திலேயே இந்த கருவிகளை பராமரிக்கும் பயோ இன்ஜுனியர்களைப் பணியில் அமர்த்துகின்றன.

பயோமெடிக்கல் அறிவியலைப் பயிற்றுவிக்கும் சில பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் பணிக்கும் பயோ இன்ஜினியர்களை நியமிக்கின்றன. ஆராய்ச்சி துறையில் பல்வேறு கருவிகள் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்களின் பணியில் ஆராய்ச்சித் துறையில் ஆர்வம் கொண்ட பயோ இன்ஜினியர்கள் சேரலாம்.- பயோ இன்ஜியியரிங் பட்டப்படிப்புக்கு பின் பட்ட மேற்படிப்புகளையும் சிறப்புப் படிப்புகளையும் படித்துத் துறை தொடர்பான அறிவையும் திறனையும் அனுபவத்தையும் பெற்றால் மிக நல்ல சம்பளத்தை பெறலாம். பயோ இன்ஜினியரிங் துறையில் பி.இ.,பி.டெக்.; படிப்புகள் உள்ளன. பயோ மெடிக்கல் துறையில் சிறப்பு படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. உதாரணமாக பயோ இன்ஸ்ட்ருமெண்டேசன். பயோமெக்கானிக்ஸ், பயோமெட்டீரியல்ஸ். டிஷ்யூ இன்ஜினியரிங் போன்ற துறைகள் உள்ளன.





அதிபராகப் பதவியேற்று 14 ஆண்டுகளின் பின்

# தீவிரவாதிகள் பட்டியலில் இருந்து நெல்சன் மண்டேலாவின் பெயர் நீக்கம்

(வோஷிங்டன்)

தீவிரவாதிகள் பட்டியலில் இருந்து நெல்சன் மண்டேலா உட்பட தென்னாபிரிக்க தலை



வர்களின் பெயர்களை நீக்குவதற்கான மசோதா அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிகள் சபையில் நிலைவேற்றப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் இனவெறி கொண்ட வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து போராடியவர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா இவர் உட்பட அக்கட்சியின் முன்னணி தலைவர்கள் மீது வெள்ளையர் அரசு நடவடிக்கை எடுத்தது.

முதல் கறுப்பின அதிபர் மண்டேலா 26 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். கட்சி தடைசெய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவிலும் மண்டேலா உட்பட அக்கட்சியின் தலைவர்களின் பெயர்கள் தீவிரவாதிகள் பட்டியலில் இடம்பெற்றது. இதனால் அவர்களால் அமெரிக்காவுக்கு செல்ல முடியாது. தென்னாபிரிக்காவில் இனவெறி அரசுக்கு 1990 ஆம் ஆண்டு முதல் பின்னடைவு ஏற்பட்டது. மண்டேலா விடுதலையானார். முதல் முறையாக நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரது கட்சி வெற்றி பெற்றது. 1994ஆம் ஆண்டு மே 10 ஆம் திகதி தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின அதிபர் என்ற பொறுப்பை மண்டேலா ஏற்றுக் கொண்டார் இதன் பிறகும் அமெரிக்காவில் தீவிரவாதிகள் பட்டியலில் மண்டேலா உள்ளிட்ட பெயர்கள் நீடித்தன. மண்டேலா அதிபராக பதவியேற்ற 14 ஆண்டுகளுக்கு பிறகு இதற்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் சபையின் வெளியுறவு குழு தலைவராக இருப்பவர் ஜனநாயக கட்சியை சேர்ந்த ஹோவர்டு பெர்மான். தீவிரவாதிகள் பட்டியலில் இடம்பெற்று இருந்த மண்டேலா உள்ளிட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களின் பெயர்களை நீக்க ஹோவர்டு முயற்சி எடுத்தார். இதற்கான மசோதா பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-5)

# பறவையைப் பார்த்து விமானம் படைத்த மனிதன் பறவைபோல பறந்து சாதனை

பறவைகளைப் பார்த்து விமானங்களைக் கண்டுபிடித்தார்கள். தற்போது பறவையாகவே மாறி பறந்திருக்கிறார் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த முன்னாள் விமானி.

ஏதாவது ஒரு விஷயத்தில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் இருந் தால் எப்படியும் சாதித்து விடலாம் என்பதற்கு விமானி எவஸ் ரோஸ்ஸி ஓர் உதாரணம். இவருக்கு நீண்ட காலமாக பறவைகளைப் போல் பறக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது



இதற்காக கடந்த நான்கு ஆண்டுகளாக பறப்பதற்கான இயந்திரங்கள் வடிவமைப்பது குறித்து சிந்தித்தார் .அதன் விளை வாக ஜெட் விமானங்களுக்குரிய எரிபொருட்களுடன் இயங்கும் நான்கு இயந்திரங்களை உருவாக்கினார்.

சிறிய விமான இறக்கை தயாரித்து அதில் நான்கு இயந்திரங்களையும் பொருத்தினார். அதை உடலில் பொருத்தி சோதித்துப் பார்த்தார் .அப்போது அவருக்கு பறக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தது பல தடைகளைத் தாண்டித்தான் பறக்கும் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார்.

எஞ்ஜினிலிருந்து வெளியேறும் சூடான புகையின் வெப்பத்தை உடல் தாங்காது. இதனால் உடலைக் காக்கும் விண்வெளி வீரர் போன்ற உடையும் அவருக்குத் தேவைப்பட்டது. தரையிலிருந்து மேலே செல்வதற்கும் கீழே வருவதற்கும் பறவைகளுக்கும் கால்கள் பயன்படுகின்றன.

மேலே செல்ல தரையிறங்க விமானங்களுக்கு சக்கரங்கள் பயன் படுகின்றன. ஆனால் நம்மால் இவையிரண்டையும் போல் செயல்படமுடியாது.

விமானத்தைப் போல் வேகமாகச் சென்று மேலே எழுந்து பறக்க முடியாது. இந்த எஞ்ஜின்களைப் பொருத்திக் கொண் டாலும் தரையிலிருந்து நேரடியாக பறக்க முடியாது என்பதை உணர்ந்தார் .

ஆகவே வானிலிருந் தபடி பறந்து காட்ட வேண்டும் என்று முடிவு செய்தார். பறந்து கொண்டிருக்கும் சிறிய விமானத்திலிருந்து குதித்து தரைக்கு மேலே 8200 அடி உயரத்தில் இவர் பறக்கத் தொடங்கினார். மணிக்கு 186 கி.மீ வேகத்தில் பறந்த அவர் கைகளை அசைப்பதன் மூலம் திசைகளை மாற்றி 360 டிகிரியில் நாலாபுறமும் பறந்து சாதனை புரிந்தார்.

தரை இறங்க பரா சூட்டை பயன் படுத்திக் கொண்டார். சுவீட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் உலகின் முதன் முறையாக பறவை போல் பறந்த இவரது சாதனை இப்போது உலகம் முழு வதும் பாராட்டப்படுகிறது.

(அ-5)

# இந்தியாவை தாக்க தயார் நிலையில் சீன ஏவுகணைகள் செயற்கைக்கோள் படங்களில் திடுக்கிடும் தகவல்

(பிஜீங்)

இந்தியாவை குறிவைத்து சீனா ஏவுகணைகளை நிறுத்தி வைத்திருப்பதாக செய்றைக்கோள் படங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தியாவுக்கு சீனா தொடர்ந்து பல ஆண்டுகளாக அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. இந்தியாவுக்கு சொந்தமான அருணாசல பிரதேசத்தை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. ஏற்கனவே ஆக்கிரமித்த இந்திய பகுதிகளையும் விட்டுத்தர மறுக்கிறது. மேலும் இந்தியாவுக்கு தொல்லை தரும் நோக்கத்தில் பாகிஸ்தானுக்கு அணு ஆயுத தொழில் நுட்பங்களை வழங்கி வருகிறது.

சீனாடவுடனான எல்லை பிரச்சினைகள் இன்னும் தீர்ந்த பாடில்லை. இந் நிலையில் சமீபத்தில் சீனாவில் ஹைனன் தீவில் கடலுக்கடியில் அணு ஆயுத நீர் மூழ்கி கப்பல் தளத்தை சீனா அமைத்தது. இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

**செய்ற்கைகோள் படங்கள்**

இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் இந்தியாவை குறிவைத்து சீனா ஏவுகணைகளை நிறுத்தி வைத்திருப்பது தெரிய வந்துள்ளது. சீனாவின் கிங்கை மாகாணத்தில் டெலிங்கா அருகே 2 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவில் 58 ஏவுகணை ஏவுதளங்களை சீனா அமைந்துள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூட்டமைப்பு எடுத்த செயற்கைக்கோள் படங்களில் இந்த தகவல் தெரிய வந்துள்ளது. இந்த விஞ்ஞானிகள் கூட்டமைப்பு அரசு சார்பற்ற அமைப்பாகும். உலக அளவில் அணு ஆயுதம் மற்றும் ஆயுதங்களை ஒழிக்கும் முயற்சியில் இந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது.

இந்த படங்களை நன்றாக ஆய்வு செய்த விஞ்ஞானிகள் கூட்டமைப்பு இந்த ஏவு தளங்கள் இந்தியாவின் வடமாநிலங்களையும் ரஷ்யாவின் தென்பகுதியையும் குறிவைத்து காணப்படுவதாக தெரிவித்தனர்.

**அணுகுண்டு தாக்குதல்**

இந்த ஏவுதளங்களில் இருந்து டிஎப் -21 ரக ஏவுகணைகள் பறக்க தயார் நிலையில் உள்ளன. இவை டெல்லி உள்ளிட்ட இந்தியாவின் வடமாநிலங்கள் வரை வந்து தாக்கும் சக்தி படைத்தவை என்றும் விஞ்ஞானிகள் கூறினர். இந்த ஏவுகணைகள் பாலிஸ்டிக் ரக ஏவுகணைகள் ஆகும். இவற்றில் அணு குண்டுகளையும் ஏற்றி அனுப்ப முடியும்.

இந்த ஏவுகணைகளால் ரஷ்யாவின் தென் பகுதியையும் தாக்க முடியும். ஆனால் ஜப்பான், தைவான் ஆகிய நாடுகளுக்கு ஆபத்து இல்லை என்று விஞ்ஞானிகள் கூறினர். (அ-5)

# உலக தரிசனம்


# பூமியில் உண்மையான முஸ்லிம் இருக்கும் வரை யூதர்களுக்கு எதிரான போர் தொடரும்

## ஒசாமா பின்லேடன் சூளுரை

(துபாய்)

பாலஸ்தீனத்தின் ஒரு அங்குல நிலத்தை கூட இஸ்ரேலுக்கு விட்டு கொடுக்க மாட்டோம். என சர்வதேச பயங்கரவாதி ஒசாமா எச்சரித்துள்ளான். இஸ்ரேல் நாடு உருவான 60ஆம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த கொண்டாட்டத்தில் அமெரிக்க அதிபர் புஷ் கலந்து கொண்டுள்ளார். இதற்கிடையே சர்வதேச பயங்கரவாதி ஒசாமா ஒலிப்பதிவு நாடாவில் தன்னுடைய பேச்சை வெளியிட்டுள்ளான்.

அதில் அவன் கூறியுள்ளதாவது இஸ்ரேல் நாடுஉருவான 60ஆம் ஆண்டுவிழாவை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து 60ஆண்டுகளுக்கு முன் இஸ்ரேல் என்ற நாடு இல்லை என்பது தெளிவாகிறது. பாலஸ்தீனத்திலிருந்து வலுகட்டாயமாக பிடுங்கப்பட்ட இடம்தான் இஸ்ரேலாக உருவாகி இருக்கிறது. யூதர்களுக்கு எதிரான போர் தொட ரும். இஸ்ரேல் மற்றும் அதன் தோழமை நாட்டுக்கு எதி ராக சண்டையிடகடஷ் எங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார். இந்த பூமியில் உண்மையான முஸ்லிம் இருக்கும் வரை



ஒரு அங்குல நிலத்தை கூட இஸ்ரேலுக்கு விட்டு கொடுக்க முடியாது.

**பாலஸ்தீனர்கள் பயங்கரவாதிகள்:** இஸ்ரேல் நாட்டவர்கள் பயங்கரவாதத்தால் பாதிகப்பட்டவர்கள் என்பது போல மேற்கத்திய நாட்டு பத்திரிகைகள் சித்தரிக்கின்றன இஸ்ரேல்- பாலஸ்தீன சண்டையின் எதிரொலியாகத் தான் அமெரிக்காவில் இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்டன இவ்வாறு ஒசாமா கூறியுள்ளான். (அ-5)

# சீன பூகம்ப இடிபாடுகளுக்கிடையிலிருந்து 5நாட்களுக்குப் பின் குழந்தை மீட்பு

(பிஜீங்)

சீன பூகம்பத்தில் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கிடந்த குழந்தையை 5நாட்களுக்குப் பிறகு மீட்டுள்ளனர். சீன பூகம்பத்தில் இதுவரை 50ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். கட்டிட இடி பாடுகளில் மீட்பு பணிகள் இன்னும் தொடர்ந்து நடந்து வருகின்றன .

அங்கிருந்து ஏராளமான பிணங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. பூகம்பம் நடந்த 5,6 நாட்கள் முடிந்து விட்ட போதிலும் இன்னும் இடிபாட்டுக்குள் சிலர் உயிரோடு இருக்கின்றனர். அவர்கள் மீட்க்கப்பட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் 5நாட்களாக புதைந்து கிடந்த 8வயது சிறுவனை மீட்பு படையினர் மீட்டனர். கடந்த இரண்டு நாட்களில் 6பேர் இதே போல உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் அணைஒன்று உடையும் அபாயம் ஏற்பட்டுள் ளது . இதனால் அந்தப் பகுதியில் இருந்த 50லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்க ளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த அணை பூகம்பத்தால் பாதிக்கப்பட்டு இருந்தது. இப்போது மழை பெய்து அணைக்கு தண்ணீர் வரத்து அதிகமாகி இருக்கிறது எனவே அணை உடையும் நிலை ஏற்பட்டுள்ளது. (அ-5)

# டொமினிக்கன் குடியரசு தேர்தல் அதிபர் பெர்னாண்டஸ் மீண்டும் தேர்வு

டொமினிக்கன் குடியரசு அதிபர் லியோனல் பெர்னாண்டஸின் பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி புதிய அதிபரை தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்றது. இதில் நடைபெற்ற வன்முறையில் 8 பேர் துப்பாக்கியால் சுடப்பட்டார்கள் நேற்று முன்தினம் ஓட்டு எண்ணிக்கை நடைபெற்றது.

இதில் தற்போதைய அதிபர் லியோனல் பெர்னாண்டஸ் வெற்றி பெற்றார். இதன் மூலம் அவர் 3ஆவது முறையாக அதிபர் ஆகிறார். அவரை எதிர்த்து போட்டியிட்ட டொமினிக்கன் புரட்சிகர கட்சி தலைவர் மிக்யுல் வர்கஸ் மால்டோனடோ தனது தோல்வியை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். (அ-5)

# கடலுக்கு அடியில் கல்லறை

கடலுக்கடியில் 45அடி ஆழுத்தில், கதவுகள், நடைபாதை, பெஞ்சுகளுடன் கூடிய கல்லறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தி.நெப்டியூன் மெமோரியல் ரீப் என்ற நிறுவனம் இந்தக் கல்லறைகளை அமைத்துத் தருகிறது. இந்தத் தோட்டத்தில் 16 ஏக்கர் பரப்பில் 1.25 லட்சம் கல்லறைகள் அமைக்க இந் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. கேரிலிவின் என்ற ஆழ்கடல் நீச்சல் நிபுணரின் யோசனையில் உதயமானது தான் இந்தக் கடல் கல்லறைத் தோட்ட திட்டம். இப்போது இவர் நெப்டியூன் மெமோரியில் ரீப் நிறுவனத்தின் பங்கதாரராகவும் இருக்கிறார். முதல் கட்டமாக 850 கல்லறைகள் அமைக்க திட்ட மிடப்பட்டுள்ளது. கீபிஸ் கேன் கடற்கரையில் இருந்து மூன்று மைல் தொலைவில் கடலுக்கடியில் இந்தக் கல்லறைத் தோட்டம் அமைக் கப்பட்டு வருகிறது மரணம் அடைந்தோரின் சாம்பல் கொண்டு வரப்பட்டு குடும்பஸ்தர் முன்னிலையில் சிமின்ட்டுன் கலக்கப்படுகிறது. அதன் பின் குடும்பத்தார் விரும்பும் வகையில் கல்லறை வடி வமைக்கப்படுகிறது. தாமிரம் வெண்கலத்தால் ஆன வேலைப்பாடுகளும் செய்யப் பட்டு வருகின்றன. இறந்தவரின் பெயர் , பிறந்த நாள், இறந்த நாள் போன்றவை பொறிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின் ஆழ் கடல் நீச்சல் வீரர்களால் இது கடலுக்கடியில் கடர் பாறையில் இணைக்கப் படுகிறது. (அ-5)

# கிழக்கின் முதலமைச்சர் அரசாங்க நிகழ்ச்சி நிரலுக்கு கையெழுத்திடுகின்ற பொம்மையாகவே இருப்பார்

## பஷீர் சேகுதாவூத் பேட்டி

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தவிசாளரும் கிழக்கு-மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தலைமை வேட்பாளராக போட்டியிட்டு மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டிருப்பவருமான பஷீர் சேகுதாவூத் இணையத் தளமொன்றுக்கு அளித்த பேட்டி;

**கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை எவ்வாறு நோக்கிறீர்கள்?**

இந்தத் தேர்தலில் ஜனநாயக விழுமியங்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. மிகவும் மோசமான வன்முறைகளும் மோசடிகளும் வாக்குகொள்ளைகளும் திருகுதாளங்களும் தில்லு முல்லுகளும் நிறைந்த ஒரு தேர்தல் இது.

1980களில் இருந்து இன்று வரை பல்வேறு தேர்தல்களில்பங்காற்றி இருக்கின்ற நான், இவ்வாறான ஒரு படுமோசமான மக்கள் விரோத ,ஜனநாயக விரோத தேர்தலை சந்தித்தது இல்லை. இவ்வாறு தான் இந்தத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என மூடிய அறைகளுக்குள் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் கச்சிதமாக இந்தத் தேர்தல் நடாத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலை கிழக்கில் நடத்தி முடிப்பதற்கு இவ்வாறான ஒரு வெற்றி அரசாங்கத்திற்கு அவசியமானது.

அதனைத் தான் அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

**நீங்கள் எப்படிச் சொன்னாலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இந்தத் தேர்தல் சரியாகவே நடந்து முடிந்து இருக்கிறது எனச் சொல்லியிருக்கிறார்களே?**

சரியாக நடந்தது என்று அவர்கள் சொல்லவில்லை. எமக்கு ஆளணி போதாது எனச் சொல்லி விட்டு இருந்தாலும் இந்தத் தேர்தல் ஏற்றுக் கொள்ளக் கூடியது என்று தான் சொல்லியிருக்கிறார்கள்.

சர்வதேச கண்காணிப்புத் தான் தேர்தலுக்கான சர்வரோக நிவாரணி அல்ல. அவர்களின் புல எல்லைகள் மிகக் குறுகியது மிகப் பிரமாண்டமான நிலப்பரப்பில் நடைபெற்ற இந்தத் தேர்தலை மிகக் குறுகிய எண்ணிக்கை உடையவர்களால் கண்காணிக்க முடியாது.

நாம் அவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. நிராகரிக்கின்றோம்.

**தேர்தல் மோசடிகளுக்கெதிராக போராடப் போவதாக சொல்லியிருந்தீர்கள் தற்போது எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன?**

தேர்தல் வன்முறைகள் மற்றும் மோசடிகள் தொடர்பாக நாம் நீதிமன்றத்தை நாட விரும்புகிறோம். ஏற்கனவே ஐ.தே.கட்சி தலைவரும்,மு.கா. தலைவரும் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து இது குறித்து கலந்துரையாடி இருக்கின்றனர்.

தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொண்டதாக தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்ட போதிலும் கூட இந்தத்தேர்தலில் நடைபெற்றமோசடிகள் குறித்து அவர் புரிந்து கொண்டிருக்கிறார்.

மூன்று மாவட்டங்களிலும் அளிக்கப்பட்ட வாக்கு வீதங்களின் அடிப்படையில் இந்தத் தேர்தலில் மோசடிகள் இடம் பெற்றுள்ளமை குறித்து புள்ளிவிபர ரீதியாக ஆணையாளருக்கு விளக்கிக் கூறியிருக்கிறோம்.

அம்பாறையின் சில பகுதிகளிலுள்ள வாக்குச் சாவடிகளில் 98வீதம், 96வீதம் வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு வாக்களிக்கப்படுகின்ற வரலாறு நமது நாட்டில் இல்லை. மிக நீண்ட அனுபவம் கொண்ட தேர்தல் ஆணையாளருக்கு இதன் பின்னணி குறித்து புரிந்து கொள்வது கடினமான தொன்றல்ல. இந்தத் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலர் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லத்தயாராகவிருக்கிறார்கள். அதனடிப்படையில் நாம் வழக்குத் தாக்கல் செய்து நீதியைப் பெறுவதற்கான முடிவில் இருக்கிறோம்.

**நீதி கிடைக்கும் என்று நம்புகிறீர்களா?**

நீதித்துறை என்று வரும்போது அதற்கு சுயாதீனமானதொரு தன்மை இருக்கிறது. இலங்கையில் நீதித்துறை அரச அதிகாரத்துக்கு முழுவதுமாக அடிபணிந்து போனது என்று எம்மால் சொல்லமுடியாது.

ஆகவே இந் நாட்டில் நீதித் துறையிடம் சென்று நீதிகேட்பதைத் தவிர வேறு மார்க்கமே இல்லை எமக்கு நீதி கிடைக்கும் என நம்புகின்றோம். தோதல் ஆணையாளருடைய சாட்சியங்களும் இதில் முக்கியமான தாக்கத்தைச் செலுத்தும் என நம்புகிறோம்.

**ஹிஸ்புல்லாவோ அல்லது பிள்ளையானோ முதலமைச்சராக வரும் இடத்து அவர்களால் எந்தளவு சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய தாக இருக்கும்?**

ஹிஸ்புல்லாவாக இருந்தாலும் சரி பிள்ளையானாக இருந்தாலும் சரி அவர்கள் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு கையெழுத்திடுகின்ற பொம்மையாகவே இருப்பார்கள் என்பதே தேர்தலுக்கு முன்னரும் தேர்தலுக்குப் பின்னருமான எமது நிலைப்பாடாக இருக்கிறது.

தற்பொழுது முஸ்லிம் அமைச்சர்கள் இராஜினாமாச் செய்வது குறித்துப் பேசுகிறார்கள். இந்த அரசாங்கத்தின் மீதிருந்த அவநம்பிக்கை காரணமாக இதனைத்தான் நாம் அன்று செய்தோம்.

இந்த அரசாங்கம் கிழக்கில் முன்னெடுக்கப்போகின்ற சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அஞ்சி அதற்கெதிராகப் போராடியாக வேண்டும் என்பதற்காகத்தான் நாம் எமது அமைச்சுப் பதவிகளை ராஜினாமாச் செய்தோம்.

39 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஜே.வி.பிக்கு கொடுத்த வாக்குறுதிகளையே நிறைவேற்றாத ஜனாதிபதியா நமக்களித்த வாக்குறுதிகளை நிறை வேற்றப்போகிறார்?

தாம் அளித்த வாக்குறுதிகளை நிறை வேற்றக்கூடாதுஎன்பதற்காக கட்சிகளைப் பிளவுபடுத்தல் எனும் தந்திரோபாயத்தை அரசாங்கம் செய்து வருகிறது. அதில் ஒரு கட்டம் தான் இன்று ஜே.வி.பிக்கு நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

**நீங்கள் ஒரு முஸ்லிம் என்ற வகையில் முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக வர வேண்டும் என்பது கூட உங்கள் விருப்பமில்லையா?**

முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வராமல் விடுவது நல்லது எனும் நிலைப்பாடு எமக்கு இல்லை. வந்தால் நல்லதுதான் அதையும் விட ஆகக் குறைந்தது கிழக்கில் தற்போதுள்ள இனச் சம நிலையைப் பேணுவதற்குப் போராடுகின்ற ஒரு தைரியமுள்ள முதலமைச்சர் வரவேண்டும் என்பதே எமது விருப்பம்.

**கிழக்கு மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது என ஹெல உறுமய சொல்வது பற்றி?**

அதனோடு சேர்த்து இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கிழக்கைப் பொறுத்த வரைக்கும் அவர்களிடம் இரண்டு நிகழ்ச்சி நிரல்கள் இருக்கின்றன. முதலாவது இராணுவ ரீதியாக வெல்வது. அடுத்தது அரசியல் ரீதியாக வெல்வது.

இராணுவ ரீதியான போராட்டத்தை இராணுவமும் புலிகளும் பார்த்துக்கொள்வார்கள். ஆனால் அரசியல் ரீதியாக வெல்வதற்கு தேர்தல் நடாத்தப்பட் வேண்டும்.

இராணுவ ரீதியான வெற்றியைத் தக்க வைப்பதற்கு அரசியல் ரீதியான வெற்றி முக்கியமானது. அரசியல் ரீதியான வெற்றியைத் தக்க வைப்பதற்கு சிங்களவர்களைக் குடியேற்றுவது முக்கியமானது. இதனையே பரிபூரணமாகக் கிழக்கில் செய்வதற்கு திட்டமிடுகிறார்கள். கிழக்கு மாத்திரமல்ல, கிழக்கை முடித்து விட்டு வடக்குக்கும் செல்வார்கள்.

ஆரம்பத்தில் கிழக்கில் ஆயுத ரீதியான எதிர்ப்பு ஒன்று இருந்ததன் காரணமாக அவர்களால் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் தற்போது இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இனி சிங்களக் குடியேற்றங்களைச் செய்வது இலகுவாக இருக்கும். (அ-5)

## வர்த்தகப் பாடத்தில் போட்டிகளை நடத்த கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் வர்த்தக பாடம் தொடர்பான போட்டி நிகழ்சிகளை நடத்துவதற்கு கல்வி அமைச்ச தீர்மானித்துள்ளது .

சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை என்பவற்றுக்கு வர்த்தக பாடத்தில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக் கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்தப் போட்டித் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தரம்10மற்றும்11இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேறாகவும்,உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தனியாகவும், இரண்டு பிரிவுகளில் வர்த்தகப் போட்டி நிகழ்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்விஅமைச்சின் கீழ் இயங்கும் மகாணப் பாடசாலைகள், தேசியப் பாடசாலைகள் மற்றும் நவோத்யா பாடசாலைகள் என்பவற்றுக்கு தனித்தனியாக போட்டிகள் நடத்தப்படவுள்ள தாக கல்விஅமைச்சு வெளியிட்டுள்ள சுற்ற றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்திலும், வலய மட்டத்திலும், மாகாணமட்டத்திலும் குறித்த போட்டிகள் நடாத்தப்பட்டு திறமையான மாணவர்களுக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. வர்த்தகத்துறையில் மாணவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு இந் நிகழ்சி திட்டம் உதவும் என தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

## மூதூர் பகுதியில் மீண்டும் மீன்பிடித் தடை

(கொழும்பு)

மூதூரில் கிழக்கு மாகாசபைத் தேர்தலுக்கு சற்று முன்தளர்த்தப்பட்டிருந்த மீன்பிடித் தடை தேர்தல் முடிவுகள் அறிவிக் கப்பட்டதும் மீள நடைமுறைப்படுத்தப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

11ஆம் திகதிக்குப் பின் தாங்கள் மீன்பிடிக்கக் செல்லவில்லை என அப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலிடத்து உத்தரவின்படி மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்க முடியாதென துறைமுக கடற்படை அதிகாரிகள் தெரிவித்ததாக மீனவர்கள் 'சண்டே லீடர்' ஆங்கிலவார இதழுக்குத் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மூதூர் தொகுதியில் அரசு அதிக வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டது.

இதனால் மீனவர்கள் துன்புறுத்தப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கிம் தெரிவித்துள்ளார்.

இத் தடையால் 2000ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

10ஆம் திகதி நடைபெற்ற தேர்தலுக்கு 10, 15 நாட்கள் முன்பாக மீன் பிடித்தடை தளர்த்தப்பட்டிருந்தாக அப் பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

தடை தளர்த்தப்பட்டிருந்த போதிலும் மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வில்லையென பெயர் குறிப்பிட விரும்பாத மூதூர் பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருகோணமலை முழுவதிலும் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை, மூதூரில் மீன்பிடித் தடை எதுவும் இல்லை. ஆனால் துறைமுகப் பிரதேசத்துள் மீனவர்கள் அனுமதிக்கப்பட வில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

(அ-5)

## பிள்ளையானுக்கு ஆதரவு வழங்க தமிழ்க்கட்சிகள் உறுதி மொழி

(கொழும்பு)

கிழக்கக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் கிழக்கிலுள்ள சகல சமூகங்களினதும் ஐக்கியத்திற்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் பிராந்தியத்தின் அபிவிருத்திக்காகவும் முதலமைச்சர் பிள்ளையானுடன் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும் எனும் ஜனாதிபதியின் அழைப்பிற்கு சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் ஜனநாயக தேசிய முன்னணியில் இணைந்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணி, ஈ.பி.டி.பி மற்றும் ஈழவர் ஜனநாயக முன்னணி ஆகியவற்றின் தலைவர்களே பிள்ளையான் தலைமையிலான கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக உறுதிமொழி அளித்துள்ளனர்.

பிள்ளையானை முதலமைச்சராக நியமிப்பதென்ற ஜனாதிபதியின் இந்த தீர்மானத்தின் மூலம் முரண்பாடானதொரு சூழ்நிலைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அந்தக் கட்சியின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபையானது கிழக்கிலுள்ள தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் மீண்டும் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் ஏறபடுத்துவதறகான எதிர்பார்ப்பைத் தோற்ற வித்துள்ளது என ஈ.பி.டி.பியின் தலைவரும், சமூக சேவைகள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் .

முதலமைச்சராக பிள்ளையானைத் நியமிப்பதென்ற ஜனாதிபதியின் தீர்மானமானது சூழ் நிலைக்கேற்றவாறு புத்திசாலித்தனமானது எனவும் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

மூன்று சமுகங்களுக்கும் பொதுவான இந்த மாகாண சபை மூலம் சமூகங்க ளுக்கிடையிலான நல்லுறவினைப் பாதுகாப்பதற்கு முன்னுதாரணமாக செயற்பட முடியும் என தமிழ் ஜனநாயக தேசிய முன்னணியின் முக்கிய உறுப்பினரும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் விடுதலைப் புலிகளிடமிருந்த விடுவிக்கப்பட்ட கிழக்கில் உள்ளூராட்சி நிர்வாகத்தையும் மீளவும் உறுதிப்படுத்திய அரசாங்கம்,தற்போது மாகாண சபையினையும் தோற்றுவித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தாம் இந்தப் புதிய மாகாண சபையை வரவேற்பதாகவும் சகல மாகாணசபை உறுப் பிணர்களுக்கும் தமது முழுமையான ஆதரவை வழங்குவோம் எனவும் அவர் உறுதி மொழியளித்துள்ளார்.

அதேபோன்று புதிய கிழக்கு மாகாண சபைக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கப் போவதாக ஈழவர் ஜனநாயக முன்னணியின் தலைவர் இராஜநாதன் பிரபாகரன் தெரிவித்துள்ளார். (அ-5)

முட்டாள்தனத்தை மூலதனமாகக் கொண்டு செயற்படும் எந்தக் காரியமும் வெற்றியைத் தராது. -பெல்ஜியம்

வலம்புரி

## யாழ்.குடாநாட்டில் தொல்லை தரும் நாய்கள்

யாழ்ப்பாணத்தில் தெருநாய்களின் தொல்லைகள் போதுமென்றாகிவிட்டது. சந்தைகள், திணைக்கள வளாகங்கள், வர்த்தக நிலையங்கள், படை முகாம்கள் என எங்கும் நாய்களின் தொல்லை அதிகரித்து விட்டது.

பொறுப்பற்ற–ஜீவகாருண்யம் பற்றி சிறிதளவேனும் புரிந்து கொள்ள முடியாத ஒரு சமூகத்தின் செயலே நாய்த் தொல்லைக்கான காரணம் ஆகும்.

ஆண் நாயின் தேவைக்காக பெண் நாயை வளர்த்து அது ஈன்ற நாய்க் குட்டிகளில் ஆண் குட்டியை மட்டும் தெரிந்தெடுத்துக் கொண்டு பெண் நாயையும், குட்டிகளையும் அகற்றி விடும் இரக்கமற்ற செயலால் நாய்கள் வீதி வீதியாக அலைகின்றன.

இதனால் பொதுமக்கள் – பாதசாரிகள் பெரும் அசௌகரியத்தைச் சந்திக்க நேரிடுகின்றது. இலங்கையிலுள்ள மைதானங்களில் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறுவதுண்டு. அவ்வாறு போட்டிகள் இடம்பெறும்போது இது எந்த நாட்டின் மைதானம் என்பதை இனங்கண்டு கொள்வதற்கு மைதானத்தில் நாய்கள் எதுவும் நடமாடுகின்றதா? என்பதை அவதானிப்பது போதுமானதாகும்.

மைதானத்திற்கு குறுக்கும் நெடுக்குமாக நாய்கள் ஓடித் திரியுமாகவிருந்தால் அது இலங்கை மைதானம் என்ற முடிபுக்கு எந்த சந்தேகமுமின்றி வர முடியும்.

இதுவே நாட்டின் நிலை என்றால், யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருபடி முன்னேற்றகரமாக வீதிகள், சந்தைகள், பொது அமைப்புகள் மற்றும் மக்கள் கூடும் இடங்கள் என எங்கும் நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பில் ஒரு முடிபுக்கு உள்ளூராட்சி அமைப்புக்கள் முன்வராத வரை, யாழ்.குடாநாட்டில் விசர் நாய்த் தொல்லையும், அதனால் பொதுமக்கள் பாதிப்படைவதும் சர்வ சாதாரணமாக இடம்பெறும்.

மகிந்த சிந்தனை, நாய் அழிப்பதற்குத் தடையாக இருப்பதாகக் கூறுவோரும் உளர். உண்மையில் மகிந்த சிந்தனையில் நாய்க்கான பாதுகாப்பு குறிப்பிடப்பட்டிருந்தாலும் தெருநாய்கள்–நோய்வாய்ப்பட்ட நிலையில் வீதிகளில் அலையும் நாய்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது? அவற்றை அழிப்பது தொடர்பில் ஒரு பொருத்தமான முடிபை உரிய உயர்அதிகாரிகள் எடுத்தாக வேண்டும்.

இதைவிடுத்து சிந்தனையைத் தூக்கிப் பிடித்தால் மனிதர்களின் எண்ணிக்கை குறைந்து போகும் ஆபத்து ஏற்படுவதைத் தடுக்க – தவிர்க்க முடியாமல் போகும்.

# பல்வகைச் சிறப்புமிக்க வைகாசி விசாகம்

**வை**காசி மாதத்தில் வரும் பூரனையும் விசாக நட்சத்திரமும் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் மிகவும் சிறப்புமிகுவழிபாட்டுத் திருநாளாக கொண்டாடப்படுகின்றது. வைகாசி விசாக நன்நாளிலே தான் கலியுக வரதனாகிய கந்தவேள்பெருமான் சிவ பெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து பிறந்த ஆறு தீப்பொறிகளாகச் சரவணப் பொய்கையில் விழுந்து ஆறுமுகப் பெருமானாக அவதரித்ததாக புராணங்கள் சிறப்பிக்கின்றன.

ஆறுமுகப் பெருமான் அவதரித்த நாளானமையினால் வைகாசி விசாக நன்நாள் முருக வழிபாட்டுக்குத் தனிச் சிறப்புடைய விழா நாளாக கொண்டாடப்படுகிறது. இந்த நாளிலே முருகப் பெருமான் கோவில் கொண்ட இடங்களில் விஷேட அபிஷேகங்கள், பூசைகள், வழிபாடுகள், தான தர்மங்கள் சிறப்பாக நடாத்தப்படுகின்றன.

மேலும் புத்த பெருமானும் இந்த வைகாசி விசாகப்பௌர்ணமி தினத்திலே அவதரித்தும் பரி நிர்வாணம் அடைந்ததும் பௌத்த பஞ்சீல தர்மத்தை இந்த உலகிற்கு போதித்துச் சென்றதும் இந்த நன்நாளிலேயே எனப் பௌத்த சமயத்தவரால் வைகாசி விசாகத் தினம் வெசாக் பெருநாளாக பெருமையுடன் கொண்டாடப்படுகின்றது.

இது மட்டுமன்றி வைஷ்ணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் முதன்மையானவரான நம்மாழ்வாரும் வைகாசி விசாக நாளில் அவதரித்தார் எனும் சிறப்பினால் வைஷ்ணவர்களுக்கு இந்த நாளில் சிறப்பாக விஷ்ணு வழிபாடுகளும் ஆழ்வார் திருநாளும் கொண்டாடுகின்றார்கள்.

எனவே வைகாசி மாதப் பூரனையும் விசாகமும் சேர்ந்த சிறப்புமிகு நன்நாள் இந்துக்கள், வைஷ்ணவர்கள், பௌத்தர்கள் எல்லோருக்கும் புனிதமான வழிபாட்டு விழா நாளாக விளங்குகின்றது. உலகிற்கு நன்நெறியை வகுத்து உலக மக்களை நல் வாழ்வு வாழ வழி காட்டுவனவாகிய இந்து, வைஷ்ணவ, பௌத்த நல் ஆன்மீக வழிகளை இத்தகைய நாட்களில் மக்கள் உணரவும் நல் வாழ்விற்கு தம்மை வழிப்படுத்தவும், உறுதுணையாகக் கொள்ளவே புனிதத் தினங்களாக சமய வாதிகளால் இது கொண்டாடப்படுகின்றது.

மேலும் இந்து சமயத்தவர்கள் சித்திராப் பூரணை, சித்திரைக்குச் சித்திரை நாளிலே சித்திர குப்த நாயனாரை வழிபட்டுத் தமது பாவங்கள் நீங்கி சுவர்க்க வாழ்வாகிய நல்வாழ்வைப் பெறவேண்டி தர்ம ராசனை வழிபடும் நாளாகவும் வைகாசிப் பூரணை தினம் அனுஷ்டிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது

இவ்விதமாக புலவிதத்திலும் சிறப்புமிக்க நாளாக விளங்கும் வைகாசி விசாக நன்நாளிலே நாமும் இறை வழிபாடுகள், தான தர்மங்கள் எம்மால் இயன்றன செய்து நற்பயன் பெற முயல்வோமாக.

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள்
திருமுன் உற்றாற்
தூயவராகிய மேலைத் தொல்
கதியடைவரன்றோ"
(கந்தபுராணம்)

நீர்வை மணி

# உண்மையே மனித வாழ்வின் கருப்பொருள்!



மனிதர்களுக்கு நம்பிக்கை என்ற அன்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நம் எல்லோருக்கம் அந்த நம்பிக்கை தேவையானது. நம்வாழ்வில் நல்லவையும் நடக்கும் கெட்டவையும் நடக்கும். நமக்குப் பிடித்தவையும் நடக்கும். பிடிக்காதவையும் நடக்கும். நாம் அவற்றினால் பெரும் பாதிப்படைகின்றோம். அப்போது உள்ளம் உடைகிறது. நம்பிக்கை யற்றுப் போகிறது. ஆனால் எது நடந்தாலும் நாம் அந்த நம்பிக்கையை இழக்கக் கூடாது.

நம் உள்ளே பல விடயங்களின் கலவை அடங்கியுள்ளது. அங்கு அச்சமும் அறியாமையும் இருக்கிறது. நாம் குழப்பத்தில் இருக்கும் போது அச்சம் நம்மைக் கௌவிக்கொள்கிறது. அதே வேளை அங்கு நம்மை ஊக்குவிக்கும் அபாரமான சக்தியும் இருக்கிறது. எனவே தான் அச்சம் இருந்த போதிலும் 'தொடர்ந்து செல், அந்த அடியை எடு' என்று அது நம்மைத்தூண்டுகிறது. மனம் தளர்ந்த நிலையில் நாம் வாழும் போதும் அது சரி என்று கூறுகிறது. அது மிகச்சக்தி வாய்ந்தது. அது தான் நம்மை முழுமையாக வைத்துள்ளது.

மிகக் கலக்கமான நிலையிலும் இந்த சக்தி அமைதிக்காக ஏங்குகிறது. நம்பிக்கை இல்லாத போது அது நமக்கு நம்பிக்கையைப்பற்றி கூறுகிறது நம்பிகை என்பது ஒரு அன்பளிப்பு. நம் தாகத்தைத் தணிக்கும் படியும் ஒவ்வொரு நாளும் நிறைவைக் காணும்படியும் நம்பிக்கை நம்மைத் தூண்டுகிறது. நம்பிக்கை தான் எல்லாவற்றையும் இயங்க வைக்கிறது.

வளர்வதற்குக் காத்திருக்கும் ஒரு சிறிய விதையிலும் நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கை எரியும் ஒரு மெழுகுவர்த்தி. அது ஒரு அழகான பொன்னிறமான சூரியன். நாளைக்கு சூரியன் திரும்பவும் உதயமாகும். என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் ஒவ்வொரு இரவும் அதற்கு விடை கொடுப்பது மிகக் கடினமாக இருக்கும். ஆனால் சூரியன் நாளைக்கு உதயமாகும். அதைப் பார்ப்பதற்கு நாம் அங்கு இருப்போம் என்று நாம் நம்புகின்றோம். நாம் நம்பிக்கையோடு நடக்க வேண்டும். நம் வாழ்க்கைப் பயணம் எதை நமக்கு காண்பிக்க இருக்கிறதோ அதைப் பார்ப்பதற்குத் தேவையான அடிகளை நாம் எடுத்து வைக்க வேண்டும்.

அமைதி என்பதும் ஆனந்தம் என்பதும் நமக்குச் சாத்தியமானது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நாம் எளிதில் பாதிப்படையக் கூடியவர்கள். ஆனாலும் நாம் மிக வலிமையானவர்கள். சாதாரணமாக எதுவும் நம்மை வீழ்த்திவிட முடியாது. நம்முள்ளே அளவிட முடியதாவலிமை இருக்கிறது. அளவிட முடியாத விவேகம் இருக்கிறது. நிகரற்ற அன்பும் இருக்கிறது. இது ஒரு நம்பிக்கை மட்டுமல்ல. இது ஒரு வியக்கத் தக்க உண்மையும் கூட நாம் நீராடக் கூடிய ஆனந்த நதி, கருணையின் நதி, அருளின் நதி அங்கே இருக்கிறது. அது தான் நம்முடைய கருப்பொருள். இது ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் குடிகொண்டுள்ளது. அந்த உண்மை நிலைக்கு உள்ளம் திறந்திடுங்கள்.

**மகராஜி**

மகராஜி என்னும் கௌரவப் பெயரால் அழைக்கப்படும் பிறேம்ராவட் அவர்கள் தனது மூன்றாவது வயது முதல் பொது நிகழ்ச்சிகளில் உரையாற்றத் தொடங்கினார். அவரது உரையின் கருப்பொருள் மனிதன் தன்னுள்ளே அமைதியைக் கண்டு கொள்வதற்கான சாத்தியம் பற்றியதாகும் தனது 13வது வயதில் அவர் இச் செய்தியினை சர்வதேச ரீதியில் கொண்டுசென்றார். இன்று 50க்கும் மேலான நாடுகளுக்கு அவர் பிரயாணம் செய்து 4.5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களிடம் உரையாற்றியுள்ளார்.

யாழ். குடாநாட்டிலுள்ள மக்களின் ஆர்வம் காரணமாக ஒவ்வொரு மாதமும் பூரணை தினத்தில் நாவலர் கலாச்சார மண்டபத்தில் இவரது அமைதியின் சொற்கள் என்ற வீடியோ நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சியினூடாக பலர் பயனடைந்து வருகின்றனர். இவ் வரிசையில் இன்றைய நிகழ்ச்சி நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 10மணிக்கு ஆரம்பமாகின்றது.

## தளம்பல் நிலையில் தங்கத்தின் விலை

(கொழும்பு)

தங்கத்தின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சி அடைந்து வருகிறது. இருபத்தி நான்கு கரட்டுள்ள ஒருபவுண் தங்கத்தின் நேற்றைய விலை இருபத்து நான்காயிரத்து 800 ரூபாவாக இருந்தது.

ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு மாத காலத்தில் சுமார் மூவாயிரத்து தொளாயிரம் ரூபாய் வீழ்ச்சி கண்டிருப்பதனால் தங்கத்தின் விலை தளம்பல் நிலையில் இருப்பதாகவும் இதனால் நகை தயாரிப்பாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

## இளைஞர் வளநிலையங்கள் நிறுவ ஏற்பாடு

நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்களை தவிர்ப்பதற்கு விசேட செயல் திட்டம் ஒன்றை தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

இதன் போது நாடு முழுவதிலும் 7 சிறுவர் மற்றும் இளைஞர் வள நிலையங்களை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகார சபை பிரதித்தலைவி நந்தா இந்திரவம்ஸ தெரிவித்துள்ளார். சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின்திறமைகளை அபிவிருத்திசெய்வதே இதன் அடிப்படை நோக்கமாகும். (அ-7)

## ஈரானிலிருந்து எண்ணெய்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஈரான் அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக எதிர்வரும் ஜுலை மாதம்வரை ஒருபீப்பாய் மசகுஎண்ணெய் 110 அமெரிக்க டொலருக்கு ஈரான் இலங்கைக்கு வழங்கவுள்ளது. (அ-5)

ஓலைச் சுவடிகள் 30

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### தியானம் மோட்ச பாதையா?

வாழ்க்கையின் துக்கங்களினின்றும் விடுதலை அடைய விரும்பும் மனிதர் மோட்ச பாதையாகவே தியானத்தைக் காண்கின்றார்.

மனதை ஒரு நிலைப்படுத்தும் போது மனதிலும் உடலிலும் இருக்கும் நிம்மதியின்மையிலிருந்து விடுபடலாம் என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எமது மக்கள் அறிந்திருந்தனர்.

தியானத்தின் வாயிலாக அவரவர் உடலை உணர்ந்து கொள்ளும் ஆத்ம ஞானத்தை பெற்றுக்கொள்கின்றோம். மனச்சிக்கல்களால் இன்றைய வாழ்க்கையில் மனித உயிரை ஆபத்துக்குள்ளாக்கும் இரத்த அழுத்தம் இருதய நோய் முதலியவற்றை தியானத்தால் கட்டுப்படுத்தலாம்.

தியானம் செய்யும்போது உடலின் பல சக்தி மையங்களில் தங்கியிருக்கும் சக்தி சம்பந்தப்பட்ட மண்டலங்களுக்கு சரியாகப் பரவி செல்கின்றது. இது ஒழுங் கற்றிருக்கும் உடலின் தாளத்தை ஒழுங்கு செய்கின்றது.

தியான நிலையில் மூளையின் பீற்றா அலைகள். அல்பா. காமா. டெல்டா. தீற்றா அலைகளாக மாறுகின்றதனால் உடலின் தாளம் ஒழுங்காகின்றது. ஆலமரத்தின் அருகாமை தியானத்துக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் என்பதைக் கண்டறிந்தோம் உடலின் விஷமேறிய நிலையிலிருந்து விடுபட ஆலமரம் உதவுகின்றது.

# முதலமைச்சர் பதவி...

குறித்து பகிரங்கமாக தெளிவுபடுத்தவுள்ளேன். முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பிள்ளையான் என்கின்ற சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கும் எனக்கும் சுமுகமான உறவு நிலவுகின்றது.

சபையின் பெரும்பான்மை குறித்த சர்ச்சைகள் ஏற்படுமாயின் அது குறித்து சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஆலோசித்து வருகின்றோம்.

தேர்தல்களின்போது மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து கிழக்கு மாகாண சபைக்கான உறுப்பினராக தெரிவு செய்துள்ளனர்.

இதன் மூலம் தமது சமூகத்தின் அபிலாசைகள் நிறைவேற்றப்படுமென்ற கனவினையும் கொண்டிருந்தனர்.

உண்மையில் எனக்கும் எனது சமூகத்திற்கும் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கம் முதலில் சமூகத்தையே ஏமாற்றி விட்டது.

இதேவேளை முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பிள்ளையானுக்கும் எனக்கும் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. எம்மிடையேயான உறவுகள் சுமுகமாகவே இருக்கின்றன.

இருப்பினும் மாகாண சபையில் ஆளும் தரப்பில் பெரும்பான்மை கேள்விக்குறியாகியுள்ளது. இந்நிலையில் தேவைகள் குறித்து சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

எனவே கிழக்கு மாகாண சபையில் நிலவி வரும் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பான சில முக்கிய தீர்மானங்கள் இன்னும் சில தினங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார். (ச-5)

# இலங்கைக்கு 110 டொலர்களுக்கு ஈரான் எண்ணெயை வழங்கவுள்ளது

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஈரான் அரசாங்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக எதிர்வரும் யூலை மாதம் வரை ஒரு பீப்பாய் மசகு எண்ணெயை 110 அமெரிக்க டொலர்களுக்கு ஈரான் இலங்கைக்கு வழங்கவுள்ளது.

உலக சந்தையில் எண்ணெயின் விலை அதிகரித்துள்ள நிலையில் இந்த உடன்படிக்கை மூலம் சுமார் ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சேமிக்கக் கூடியதாக இருக்கும் என ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நுகர்வோரை பாதுகாக்கும் பொருட்டே இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் எரிபொருள் விலைகளை அதிகரிப்பது குறித்த எந்தவித தீர்மானங்களும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். (ச-5)

# புலிகளின்...

சடலங்களையும் விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்காக இராணுவத்தினர் நேற்று முன்தினம் வவுனியா வைத்திய சாலையில் ஒப்படைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கிழக்கு...

இதனையடுத்து மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

இராணுவத்தினரின் கடுமையான பாதுகாப்புடன் கண்டிக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண முதலமைச்சர் மூன்று மணியளவில் புறப்பட்டுச்சென்றார். (ச-5)

# மன்னாரில்...

கண்டல்குளம் அணையூடாக வண்ணாங்குளம் நோக்கி நேற்று அதிகாலை 5 மணி முதல் முற்பகல் 11 மணி வரை செறிவான எறிகணை சூட்டாதரவுடன் முன்னகர்ந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் செறிவான தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# இனவாத மோதல்களுக்கு...

களுக்கும் அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும் என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கிழக்கு மாகாணத் தேர்தல் தொடர்பில் ஜே.வி.பியின் அரசியல் குழு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தலின் பின்னரான கிழக்கின் நிலைமைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும். கிழக்கு மாகாணசபைத் தேர்தல் அரங்கேற்ற மேடைக்குப் பின்னால்இந்தியா செயற்பட்டது.

தமக்கு கீழ்ப்படியக் கூடிய மாகாண சபையை உருவாக்கி பிள்ளையானை முதலமைச்சராக்கும் இந்தியாவின் முயற்சி வெற்றியளித்துள்ளது.

ஹிஸ்புல்லா சார்பான உறுப்பினர்கள் தனித்து இயங்க மூடிபு செய்துள்ளனர். அத்தோடு முதலமைச்சர் பதவி கிடைக்காததால் கிழக்கில் ஹர்த்தால்கள் ஆரம்பமாகியுள்ளன.

முதலமைச்சர் பதவியை கரட் கிழங்கைப் போல் பயன்படுத்திய அரசாங்கம் இதனைக் காட்டி தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாத அரசியலை பயிர் செய்தது.

இன்று அந்த அறுவடையின் பலாபலன்களை அரசாங்கம் மட்டுமல்ல; முழுநாடுமே அனுபவிக்கும் நிலை தோன்றியுள்ளது. பிள்ளையானை முதலமைச்சராக்கி இந்தியாவின் தேவையை நிறைவேற்றியுள்ள அரசாங்கம் தனது அரசியல் எதிர்காலத்தையும் நெருக்கடியில் தள்ளிவிட்டுள்ளது என்றுள்ளது. (ச-5)

# இலங்கைக்கும் பாகிஸ்...

மேற்கத்தேய நாடுகள் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை தொடர்ந்தும் முன் எடுக்கப்படும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனவும் பயங்கரவாத நடவடிக்கை காரணமாகவே அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இலங்கையைப் போன்று பாகிஸ்தானும் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்நோக்குவதாக பிரதமர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# அனைவரும் ...

வழங்கக்கூடிய மிகப் பெரும் கௌரவம் யாதெனில் வெசாக் பண்டிகைக் காலத்தில் புத்த பெருமானின் போதனைகளுக்கமைய வாழ்வதே என்பதை நாம் அறிவோம். சிறந்தவற்றை மதித்து நடப்பதன் மூலமே இவ்வுலகிலும் மறு உலகிலும் நாம் முன்னேற்றத்தை அடைய முடியும் எனபுத்தபெருமான் எங்களுக்கு வழி காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கை அந்த தர்ம போதனைகளுக்கு கட்டுப்பாட்டு, சரியான வழியில் நாட்டை வழிநடத்துவதேயாகும். அவ்வாறு செய்யும்போது மற்றவரின் கருத்துக்களை சகிப்புத்தன்மையோடு ஏற்று, கருணை அன்புடன்நடந்து கொள்வதும் எமது பொறுப்பாகும். (ச)

# வெசாக் தினத்தை...

துடன் இரவு 10 மணிக்கு மேல் ஒலிபெருக்கி பயன்படுத்துவது அப்பிரதேச மக்களின் கருத்தறிந்து அவற்றை நீதிமன்றுக்கு அறிவித்து அதற்கான நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானித்திருப்பதாகவும் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இம்முறை வெசாக் தினங்களை முன்னிட்டு கொழும்பில் 7 பாரிய வெசாக் தோரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொட்டலங்க, தெமட்டகொட, குருந்துவத்த, புறக்கோட்டை, அத்துட்டு உயன, பேலியகொட, பெஸ்டின் மாவத்த போன்ற இடங்களில் இவை அமைக்கப்பட்டுள்ளன. (ச-5)

# பெரும்பான்மையை ...

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இரண்டு போனஸ் ஆசனங்களுடன் 20 உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், 15 உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சியும், தலா ஒவ்வொரு உறுப்பினர்களை ஜே.வி.பியும் தமிழ் ஜனநாயகக் கூட்டணியும் பெற்றிருந்தன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் மூவர் ஹிஸ்புல்லா தலைமையில் தனித்து செயற்பட முடிபு செய்தமையினால் ஆளும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 17ஆகவும் எதிர்க் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 20ஆகவும் மாறியுள்ளது.

இந்த நிலையில் எதிர்க்கட்சியில் உள்ள இரண்டு உறுப்பினர்களின் ஆதரவினை பெற்றால் மட்டுமே முதலாவது சபை அமர்வின் போது பெரும்பான்மையினை அரசாங்கம் நிரூபிக்க முடியும். இந்த நிலையில் பெரும்பான்மையினை நிரூபிப்பதற்கு உறுப்பினர்களை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளில் அரசாங்க உயர் மட்டத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் ஜனநாயக தேசியக் கூட்டணியின் உறுப்பினர் அரசாங்கத்துக்கு ஆரவளிப்பார் என்று எதிர் பார்க்கப்படும் நிலையில் இன்னுமொரு உறுப்பினரின் ஆதரவினை ஆளும் தரப்பு பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தெரிவான ஜே.வி.பி உறுப்பினர் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என்பதால் ஐ.தே.கவின் உறுப்பினர்கள் சிலரை அரசாங்கத் தரப்புக்கு மாற்றுவதற்கான முயற்சிகளும் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ,கிழக்கு மாகாண அமைச்சினை பெற்றுக் கொண்டு ஆளும் தரப்பினருக்கு ஆதரவளிக்குமாறு ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லாவை அரசாங்கத் தரப்பினர் வலியுறுத்தியும் வருகின்றனர்.

ஆனால் தமது முடிபில் மாற்றம் எதுவும் இல்லை என்று ஹிஸ்புல்லா தரப்பினர் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில், முதலாவது அமர்வில் பெரும்பான்மையினை நிரூபிப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

### மற்றொருவர் இணைவு?

இது இவ்வாறிருக்க கிழக்கு மாகாண சபையில் தனித்து செயற்படப்போவதாக அறிவித்துள்ள ஹிஸ்புல்லா தலைமையிலான குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கு மற்றுமொரு உறுப்பினர் இணக்கம் தெரிவித்துள்ளதாக நம்பகரமாக தெரியவருகின்றது.

முதலமைச்சராக பிள்ளையானை நியமிப்பதற்கு ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் நோக்கிலேயே அந்த உறுப்பினர் ஹிஸ்புல்லா குழுவுடன் இணைந்து கொள்வதற்கு இணங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹிஸ்புல்லா தலைமையிலான குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கு மற்றுமொரு உறுப்பினர் இணக்கம் தெரிவித்துள்ளமையினால் கிழக்கு மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மைப் பலம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது.

இந்நிலையில் சபையில் பெரும்பான்மையை நிரூபிப்பதில் அரசாங்கம் புதிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது.

### ஐ.தே.க முயற்சி

இதேவேளை கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை கை பற்றுவதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சுயேட்சையாக செயற்படுவதற்கு முயற்சித்த உறுப்பினர்களை தன் வசம் இழுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

சுயேட்சையாக செயற்படுவது குறித்து ஹிஸ்புல்லா கருத்துத் தெரிவிக்கையில், மாகாண சபையில் சுயேட்சையாக செயற்படுவது தொடர்பாக எம்மால் எடுக்கப்பட்டுள்ள முடிபில் எவ்விதமான மாற்றங்களும் இல்லை.

எமது குழுவில் இணைந்து செயற்படுவதற்கு மற்றுமொரு உறுப்பினர் இணக்கம் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட ஒருவரே இவ்வாறு இணக்கம் தெரிவித்துள்ளார். எனினும் அந்த உறுப்பினரின் பெயரை தற்போதைய நிலையில் தெரிவிக்க முடியாதுள்ளது.

சுயேட்சையாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ள எமது தரப்பினரை அரசாங்கத்துக்குள் இணைத்துக்கொள்வது தொடர்பிலோ அல்லது எதிர்க்கட்சி தரப்பில் இணைத்துக்கொள்வது குறித்தோ எவ்வித மான பேச்சுவார்த்தைகளும் நேற்று வரையில் இடம்பெறவில்லை என்றார். (ச-5)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 04 1946



மறைவு 19 04 2008

அமரர்

**திருமதி இராசம்மா கோதண்டபாணி**

எம் குடும்பத்தின் கலங்கரை விளக்கமாய் உற்ற துணையாய் அன்பும் ஆலோசனையும் வழங்கிக் காத்த பாசத்தின் திருவுருவே! எம் இதயம் கனக்க உம் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

அமரரின் ஈமக்கிரியைகளின்போது சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றி அறிதல்கள்.

இன்று (19.05.2008) காலை 7 மணிக்கு சந்நிதி முருகன் ஆலயத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். தொடர்ந்து 10 மணி அளவில் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

(1201)

## மரண அறிவித்தல்

**பரமு கதிரவேற்பிள்ளை (கார்த்திகேசு)**

(பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.)

பரமு கதிரவேற்பிள்ளை (கார்த்திகேசு) 16.05. 2008இல் அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19.05.2008 இன்று நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(C-1148)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.